www.tamilarangam.net

# களத்தில்




திருவள்ளுவர் ஆண்டு 2028 (19.11. 1997 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (148) அன்பளிப்பு: 60 p


## செங்குருதி சிந்தினீர்கள்

எங்கள் தேசம் விடிய
உயிரைக் கொடுத்த வீர மறவரே
உம் இனிய கனவு விரைவில்
மலரும் உறங்கு வீரே.

நீங்கள் தந்த குருதியில்
புதிய தேசம் மலர்ந்தது
நீங்கள் புரிந்த வீரத்தில்
தமிழர் தலைகள் நிமிர்ந்தன

சொந்தம் இழந்த நீங்கள்
செங்குருதி சிந்தினீர்கள்
உடல்கள் சிதைந்து நீங்கள்
உருக்குலைந்து போனீர்கள்

புரட்சித் தீயினில் குளிப்போம்
புதியதோர் வரலாறு
படைப்போம்
இழந்த தேசத்தை மீட்போம்
மண்ணில் தலைநிமிர்ந்து
வாழ்ந்திடுவோம்!



## ஜெயசிக்குறு முன்னரங்க பகுதிமீது விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல்

ஜெயசிக்குறு 3வது கட்டத்தைத் தொடங்க சிறிலங்கா அரசு பலவழிகளில் முயன்று வரும் அதேவேளை, ஜெயசிக்குறு முன்னரங்க பகுதி மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தொடர்கின்றன.

மோட்டார் தாக்குதல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விடுதலைப் புலிகள், 11ஆம் திகதி ஜெயசிக்குறு முன்னரங்க பகுதிகளை மோட்டார் தாக்குதலுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

இதேவேளை வவுனியாவில் இருந்து வெளிவரும் செய்திகளின்படி, சிங்களப்படை பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு பருவமழைக்கு முகங்கொடுக்க முடியாமல் கடுஞ்சேதங்களை அடைந்து வருகிறது. காயப்படுவர்களை முன்னரங்கப் பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்தி

தொடர்ச்சி10ம் பக்கம்...

## விடுதலை வேண்டிநிற்கும் பெண்ணினத்தின் உணர்வோடு இந்நாளில் ஒன்றுபடுவோம்

### விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு வன்னியில் விடுத்துள்ள அறிக்கை

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள், இது எமது இயக்கத்தின் புரட்சிப் பெண் ஒருத்தி தாயக விடுதலைக்காகத் தன்னைத் தற்கொடையாக்கிய நாள். எம்மினத்தை அழிக்க நினைக்கும் எதிரிக்கு எதிரான போரில் பாலின வேறுபாடற்று அனைவரும் கலந்து கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்தும் நாள். இன்னமும் தம்மை உணர்ந்து கொள்ளாது சமூகத்தில் பின்தங்கி நிற்கின்ற பெண்களின் முன்னேற்றத்துக்காக நாமெல்லோரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டிய

தொடர்ச்சி 10 ம் பக்கம்...

## எம்-ஐ-24 உலங்கு வானூர்தி வெடித்துச் சிதறியது

மூன்று எம்-ஐ-17 ரக துருப்புக்காவி உலங்குவானூர்திகளில் வடக்கு நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த சிறிலங்கா துருப்புகளுக்கு பாதுகாப்பு வழங்கியபடி சென்று கொண்டிருந்த எம்-ஐ-24 ரக ரஸ்ய தயாரிப்பு உலங்கு வானூர்தி தாக்குதலுக்கு உள்ளாகி தரையில் வீழ்ந்து நொருங்கியது. இச் சம்பவம் கடந்த

தொடர்ச்சி10ம் பக்கம்...

## அமெரிக்காவின் செயலால் தமிழகத்தில் எதிர்ப்புஅலை

* 2000க்கு மேலானோர் கைது

தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை அமெரிக்கா தனது 'பயங்கரவாத' பட்டியலில் சேர்த்தமை உலகெங்கும் வாழும் தமிழரிடையில் பலத்த அதிருப்தியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதன் எதிரொலியாக ஆறரைக் கோடி தமிழர்களைக் கொண்ட இந்திய தமிழ்நாட்டு மாநிலத்தில் தமிழ் மக்களிடையில் அமெரிக்காவின் செயலுக்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்து வருகின்றது.

தமிழீழ விடுதலை ஆதரவாளர்

தொடர்ச்சி10ம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamilarangam.net





## தேசிய தினமான மாவீரர் நாள்

எங்கள் தமிழீழத் தேசத்தில் சுதந்திரக் காற்று வீசுவதற்காகத் தம் மூச்சையே தந்த அற்புதமான மனிதர்கள் எங்கள் மாவீரர்கள். நேற்று என்பதை, சந்திக்கும் வாழ்வு முடிந்துவிட்டதாகக் கூறப்படுவது வழமை. எங்கள் மாவீரர்கள், எங்கள் வாழ்வின் – தமிழீழ மக்கள் வாழ்வின் விளக்கொளி எண்ணெய் போல் தம்மை ஆக்கி தமிழீழ மக்களின் வாழ்வோடு வாழ்பவர்கள். அவர்கள் வாழ்வு நேற்று என்பதைச் சந்திக்கவே சந்திக்காது என்பதினால்தான், மரணமில்லாத மனித குலம் ஒன்றை மாவீரர்கள் எனும் திருப்பெயரோடு தமிழீழத் தேசத்தில் உலகு காண்கின்றது. தாய் அங்கு காத்திருக்க, தந்தை வழி பார்த்திருக்க, சகோதரர்கள்– உறவுகளை விட்டுவிட்டு தேசப்பற்றுக் கொண்டு களம் வெல்ல உயிர்தந்த உத்தமர்கள் உயர்நினைவால் தமிழீழத் தேசம் எழுந்து நின்று வீரவணக்கமிடும் உன்னதமான தினம் மாவீரர் நாள். தன்னலம் அணுவுமின்றி, தேச நலனுக்காய் தேகம் சிதைந்து வித்துடல் கொண்டவர்களே எங்கள் மாவீரர்கள். மாவீரர்கள் இறந்தவர்களல்ல. அதனால்தான், அவர்கள் கல்லறைகள் ஆயிரம் ஆயிரம் விடுதலைப் புலிகளை – தமிழீழப் போராளிகளைக் கருத்தரிக்கும் சக்திக் குன்றுகளாக விளங்குகின்றன.

இந்நேரத்திலே எங்களுக்காய் தங்கள் உயிரையே தந்த எங்கள் மாவீரர்களின் வற்றாத மக்கள் அன்பை எண்ணிப் பார்த்து, அவர்கள் புகழ்பாட தமிழீழ மக்களாகிய நாம் கண்ட தினம் நம் மாவீரர் நாள். இத் தினம், தமிழ் மக்கள் அடைந்த துயர்பாடுகளை எடுத்தியம்பி நிற்கின்ற நாள் அல்ல. மாவீரருக்கு மக்கள் ஈகச்சுடர் ஏற்றி, அவ் ஒளியில் பட்டை தீட்டிய வைரமென தம் நெஞ்சை உறுதியாக்கி, உறுதியின் உறைவிடமென அவர் துயிலகம் வணங்கி, அவர்களின் தியாகவழி தமிழீழத் தேச விடுதலைப் பணி தொடர சத்தியமொழி செய்யும் நாள்தான் மாவீரர் நாள். இந்நாள் எம் தேசத்துக்கு விடுதலைச் சக்தி வழங்கும் அற்புத நாளாக விளங்குவதால்தான், நாளும் விடுதலைத் தீயில் குளித்திடும் எங்கள் தேசத் தலைவன் பிரபாகரன் அவர்கள், இத் தினத்தை தமிழீழத் தேசத்தினமாகப் பிரகடனம் செய்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் மாவீரன் சங்கர் வீரச்சாவுற்ற தினமான கார்த்திகை 27ஆம் நாள் தமிழீழத் தேச வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பித்ததினால் இந் நாள் தேசிய தினமாகும் வரலாற்றுத் தகுதி பெற்று நிற்கிறது.

தேசியவாதம் என்பது, முதலில் விருப்பை சரியான முறையில் நிர்ணயிப்பதற்கான வழியினை படிப்பிப்பதாகவும் இறுதியில் தேசிய சுயநிர்ணயம் என்பது, அவ் விருப்பினை நிர்ணயிப்பதாகவும் அமைகிறது. இதனை தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் பொருத்திப் பார்ப்போமானால், தமிழ்த் தேசியவாதம் என்பது தமிழீழ மக்களின் விருப்பான பாதுகாப்பான அமைதி வாழ்வை நிர்ணயிப்பதற்கான சரியான வழிகளைப் படிப்பிக்கின்றது. இறுதியில் தமிழீழ மக்கள் தமது உயிரைக் கொண்டு தமது விருப்பினை நிர்ணயித்து இந்த உயிர் அர்ப்பணிப்புகளுக்கான உன்னத நோக்காகவும் பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கான தவிர்க்கமுடியாத தேவையாகவும் உள்ள தமிழீழத் தேசமே தமது விருப்பு எனக்கூறி, தேசிய சுயநிர்ணயத்தை மாவீரர்கள் மூலம் தெளிவுபடுத்தி நிற்கின்றனர்.

இந்த மாவீரர்கள் எதற்காக வீரச்சாவு எய்தினர் – தமிழீழத் தேசத்தை மீளமைக்கும் 1977ஆம் ஆண்டின் தமிழ் மக்கள் விருப்பை நனவாக்குவதற்காகவே இவ் மாவீரர்கள் தமது உயிரையும் ஈந்து தமிழீழத் தேச ஆன்மாவாக விளங்குகின்றனர். இந்த தமிழீழத் தேசத்தை இனி யாராலும் உருக்குலைவு செய்யமுடியாது என்பதற்கான எச்சரிக்கை ஒளியாக மாவீரர்களின் அணையாதீபங்கள் திகழ்கின்றன. மாவீரர்கள்தான், தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணயத்தின் தெளிவானதும் மறுக்க முடியாததுமான சாட்சியங்கள். தங்கள் இன்னுயிர்களையே சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசிற்கு எதிரான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான ஆயுதமாக தமிழீழ மக்கள் பயன்படுத்தும் அளவுக்கு அவர்கள் தமிழீழத் தேசத்துக்கான தமது தேசிய சுயநிர்ணயத்தில் உறுதியாக உள்ளனர்.

அத்துடன், தமிழீழத் தேசம் ஆளுமைமிக்க ஆற்றல் உள்ள தேசத் தலைவனையும், இதுதான் தமிழீழத் தேசப் பாதுகாப்புப் படை என இனங்காணக்கூடிய சீருடை அணிந்த படையையும் கொண்டு, வரி அறவிடுதல் முதல் நீதி நிர்வாகங்கள் வரை ஒரு சுதந்திர தேசத்துக்கான சகல தேவைகளையும் பூர்த்தி செய்து நிற்கிறது. இது சர்வதேச தந்திரோபாய மதிப்பீட்டாலும் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், இத்தகைய உண்மை இறைமையுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரம் ஒன்றே இல்லாமல் இருக்கிறது. இதனை கொழும்பு அரசு அனுமதிக்கமாட்டாது. இந்நிலையில் பேச்சுவார்த்தைகளும் எய்தப்பட்ட இந்த யதார்த்த நிலைகளை திருப்திப்படுத்துமா எனப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டுமென்று 1995ஆம் ஆண்டிலேயே கேள்வி கேட்கப்பட்டது. அந்தக் கேள்வியின் நியாயத் தன்மையையும் அதற்கு சிறிலங்கா அளித்த கடந்த இரண்டாண்டு கால பதில்களையும் பார்ப்பவர்களுக்கு மாவீரர்களின் இலக்கான தமிழீழத் தேசத்தின் தேவை தெளிவாக விளங்கும். ஆதலால், தமிழீழத் தேசிய தினமான மாவீரர் நாள் மாவீரரின் கனவுகள் இன்றே நனவாகி நிற்பதற்கு உறுதி பகர்கிறது. இந்த உண்மையை உலகு அங்கீகரிக்க வேண்டும் என்பது ஒன்றே மிகுதியாக உள்ளது. சுருக்கமாகச் சொன்னால், தமிழீழத் தேசம் இலங்கைத் தீவில் ஒரு தனியரசாக அன்றும் இன்றும் மட்டுமல்ல என்றும் விளங்கத்தான் போகிறது. இதைத் தடுக்கும் சக்தி இனி யாருக்கும் இல்லை என்பதே மாவீரர் வேதம். எனவே, இந்த யதார்த்த நிலையை சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசுக்கு சர்வதேச அழுத்தங்களால் உணர்த்தி, போரினால் இலங்கைத் தீவின் உயிர்களையும் உடமைகளையும் நாசமாக்கும் போக்கை, நோக்கை கைவிட்டு படைகளை விலக்கி விடுதலைப் புலிகளுடன் சமாதான முறையில் பேசி, "ஒரு தீவில் இருதேச மக்கள்" என்ற உண்மையின் அடிப்படையில் இத் தேச மக்கள் இருபாலரும் எதிர்காலத்தை எப்படி எதிர்கொள்ளலாம் எனச் சிந்திக்க வைப்பது ஒன்றே நல்லது என்பதே புலம்பெயர் தமிழ்மக்களின் கருத்தாக உள்ளது. ✷

## சீற்றம் ஏன்?

கடந்த அவசரகால சட்ட விவாதிப்பின் போது கொழும்புப் பத்திரிகைகள் படையினரை குழப்புகின்றன எனப் பத்திரிகையாளரை சாடியுள்ளதோடு மட்டுமல்ல இராணுவ அதிகாரிகளில் ஒரு தரப்பினரையும் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல்

**தமிழ் மண்ணை ஆக்கிரமிக்க, ரத்வத்தை எடுக்கும் இராணுவ நடவடிக்கையின் நிலையை அவரின் மொழியில் கூறுவதானால், "வாலை விட்டு தலையைப் பிடிக்கப் போய் வாலும் போய் தலையும் போகும் நிலை" ஆகியுள்ளது எனலாம்.**

அநுரத்த ரத்வத்த குற்றம் சாட்டியுள்ளார். இராணுவத்தில் சில பதவிகளை எதிர்பார்த்து அதனை அடைய முடியாதவர்களே போர் நடவடிக்கைகளைப் பத்திரிகைகளுக்கு வழங்குகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். அமைச்சர் ரத்வத்த, சண்டைக்காலத்தில் இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள், தாமதங்கள் என்பனவற்றுக்கு காரணம் தேடுவதில் முனைப்பாக உள்ளார். இதனை அண்மைக்காலத்தில் நடைபெற்ற வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களின் கூட்டத்தில் பேசும் போதும் பாராளுமன்றத்தின் அவசரகால நீடிப்பு விவாதத்தின் போதும் வெளிப்படையாகவே காண முடிந்தது. அரசாங்கம் எண்ணிய மாதிரியோ அன்றி திட்டமிட்டது மாதிரியோ இராணுவ இலக்குகள் எட்டப்படாமைக்கு இது காரணமாகும். சந்திரிகா அரசாங்கம் குடாநாட்டின் மீது படையெடுத்த போது விடுதலைப் புலிகளுடனான போர் விரைவில் முடிவுக்கு வந்துவிடும் என்றே நம்பியது. இதன் அடிப்படையில் போரில் வெற்றியை விகிதாசார ரீதியில் தெரிவித்து வந்ததோடு போர் முடிவதற்கான கால நிர்ணயத்தையும் குறுகிய காலத்தினையும் சம்பந்தப்படுத்தத் தொடங்கியது. அமைச்சர் ரத்வத்தவின் கூற்றுக்களின் படி தலைப்பகுதி நசுக்கப்பட்டால் ஏனைய பகுதிகள் தாமாகவே செயலற்றுவிடும் என்பதாக இருந்தது. இதன் அடிப்படையிலேயே கிழக்கில் இருந்து வரும் எண்ணிக்கையான துருப்புக்கள் யாழ் குடாநாட்டுக்குள் நகர்த்தப்பட்டன. இதன் விளைவு கிழக்கில் ஆக்கிரமிப்புக்குள் இருந்த பெரும் நிலப்பரப்பை இழக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஆயினும் அமைச்சர் ரத்வத்தையால் நமது தலைப்பகுதியை நசிக்க முற்படும் வேலையைக் கைவிடமுடியவில்லை. 40,000 துருப்புக்களைக் கொண்டு யாழ் குடாநாட்டை ஆக்கிரமிப்புக்குள் கொண்டுவந்தார். ஆனால் ரத்வத்த எதிர்பார்த்தது போல் யாழ் குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்டாலும் புலிகளின் நிலைப்பாடு பலவீனப்பட்டதாக இல்லை. சிறிலங்கா அரசு யுத்த முடிவுக்கு விதித்த காலநிர்ணயம் எல்லாவற்றையும் மீறி யுத்தம் தொடர்கின்றது. இதில் ஜெயசுக்குறு நடவடிக்கையானது சிறிலங்கா அரசினால் திட்டமிட்ட கால எல்லையையும் கடந்து எதிர்பார்க்க முடியாத அளவு நீண்டு செல்கின்றது. 20,000 படையினரே போதும் என்ற நடவடிக்கையில் இன்று இருப்பதோடு 40,000 பேர்வரை தொடர்புபட்டு வவுனியா – கிளிநொச்சிப் பாதைக்குப்பதில் மாங்குளம் முல்லைத்தீவுப் பாதையில் இராணுவம் தவித்து நிற்கின்றது. இதேசமயம் 'ரிவிரச' நடவடிக்கைக்கு கிழக்கில் உள்ள முகாம்களை மூடியது போன்று ஜெயசிக்குறு நடவடிக்கைக்கு என கிழக்கில் மட்டுமல்ல யாழ் குடாநாட்டிலேயே பல படை முகாம்களை மூடவேண்டிய நிலையும் உருவாகியது. அதாவது யாழ் குடாநாட்டில் இருக்கும் துருப்புக்களைத் தரைவழித் திறப்புக்காக நகர்த்தவேண்டிய நிலையில் உருவாகியது. இந் நிலையானது கிழக்கில் உருவாகியுள்ளது போன்ற நிலையை யாழ் குடாநாட்டிலும் ஏற்படுத்துமா என்ற கேள்வி தற்போது எழும்பியுள்ளது. இந்த நிலையினை அமைச்சர் ரத்வத்த கூட ஓரளவுக்கு புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளார் என்பதற்கு இடமுண்டு. இல்லாவிடில் தரைவழிப் பாதையை பிடிப்பதும் அதனைத்

**வன்னித்தளத்தைக் கைப்பற்ற 20,000 படையினர் போதுமென்ற கணிப்புடன் களத்தில் இறங்கிய சிங்களப்படை தற்போது தனது படையின் அரைப்பங்கை இதில் ஈடுபடுத்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு வருகிறது.**

தக்கவைப்பது என்பதும் கடினம் என்ற வார்த்தைகள் அவரது வாயில் இருந்து வந்திருக்கமாட்டாது. இதைத்தவிர தற்போது இராணுவ பின்னடைவுகளுக்கும் இழப்புக்களுக்கும் வேறுயாரையோ பலிக்கடாவாக்க முனைந்திருக்கமாட்டார்.

ஏனெனில் இன்று இராணுவம் சந்திக்கும் நெருக்கடிகளுக்கு அரசியல் தலைமைப்பீடத்தின் தவறான கருத்துக்களைக் கேட்டும் அதன் அடிப்படையில் உருவாகிய இராணுவமுயற்சிகளுமே காரணம். இதற்கு அமைச்சர் ரத்வத்த மொழியில் கூறுவதானால் வாலை விட்டு தலையைப் பிடிக்கப் போய் வாலும்

போய் தலையும் போகும் நிலை ஏற்பட்டுள்ளது எனலாம். ✷

www.tamilarangam.net



'பிரபாகரன் பிள்ளைத் தமிழ்' என்ற படைப்புக்காக எழுதப்பட்ட கவிதைத் தொடையிலிருந்து ஒரு சில பூக்களை, எமது தலைவனது நாற்பத்து மூன்றாவது பிறந்த நாளையொட்டி பிரசுரிக்கின்றோம்.

# பிரபாகரன் பிள்ளைத் தமிழ்

## 'உதிப்பு'

கடல்சூழ் தீவின் கண்ணீர் துடைக்கவும்
இடர்போய்த் தமிழர்க் கீழம் உதிக்கவும்
அடல் ஏறாக அனற் பொறி யொன்று
உடல் கொண்டிந்த அவனியிற் றெறித்ததே!

தமிழக ஆட்சியின் தலைவிதி கண்டு
உமையவள் சிவனிடம் உத்தரவிட்டதற்
கமைய எம் தாயகப் பூமியின் மடியில்
தமிழ்மகள் புத்திரன் தவழ்ந்தனன் அம்மா!

முன்னாட் சோழன் முதுகுடைந்தானென
இந்நாள் வரையிற் சொன்னார் சிலபேர்!
மின்னாய் ஒருகதிர் மேனி கொண்டெங்கள்
மண்ணில் எழுந்த தெம் மாதவம் அன்றோ!

கொதிக்கும் தாருக்குள் குளித்த தமிழனின்
விழிக்குள் இருந்து விரிந்தவன் பிரபா!
எதிர்க்கும் திறமையை இழந்த இனத்தினை
மதிக்கும் நிலைக்கு மலர்த்திய மாதவன்!

மிதிபடப் பிறந்தவன் தமிழன் என்ற
விதிதனைத் தகர்த்திட விளைந்த செங்கதிர்!
'உதி' என இவனை உலகுக் கனுப்பினர்
உயிரெனத் தமிழினை ஓதிய ஞானியர்!

கதியிலை யென்று கலங்கிய மக்களின்
காதிலே வீழ்ந்த காலத்தின் சங்கொலி!
நதியெனப் பாய்ந்து எம் தாயகம் நனைத்துச்
சுதியினை மீட்டிய சுதந்திரப் பேரொளி!

இலக்கியத் திரையினை விலக்கி யதனுளே
இருக்கிறான் இன்றும் தமிழன் உயிருடன்
நிலத்திலே யென்று நிகழ்த்திக் காட்டிய
மலைக்கரம் இந்த மைந்தனின் மாகரம்!

சங்கத் தமிழின் சரக்குக் கலைந்த
மங்கற் கவிஞரை மறித்து நிமிர்த்தி
இங்கு பாரடா பரணியை என்று
எங்கள் மண்ணுக்கு ஈர்த்த எம் தலைவன்!



பேசிப் பேசியே பேச்சினை யிழந்து பாழ்
பேடியர் கூட்டமாய் வாடிய எங்கள்முன்
தேசியக் கொடியுடன் திறந்த நெஞ்சுடன்
பாடிப் பறந்தெமைப் பரவசப் படுத்தியோன்!

பொதிகை மலையிற் குறுமுனி சிரிக்கப்
பொதுமறை ஓதிய வள்ளுவன் களிக்க
எதுகையாய் எங்கள் இனத்தின் கவிதையாய்
வல்வையில் ஒருத்தி வயிற்றினில் வளர்ந்தான்!

வள்ளமும் படகும் பாய்விரி கலமும்
துள்ளியே ஆடத் தொட்டிலாய் அசையும்
வெள்ளலை தழுவும் வேங்கையர் பூமியின்
பிள்ளையாய் இந்தப் பெரியவன் தோன்றினான்!

கோயிலை வீட்டைக் குடிமையை எரிக்கத்
தீயினை மூட்டித் தெருத் தெருவாகப்
பேயென அலைந்த பாழின வெறியரை
மாய்த்திட வந்த மாலவன் இவனே!

திக்குகள் தோறும் திரட்டியே பௌத்தப்
பிக்குகள் ஏவிய பிசாசுப் படைகள்
கக்கிய விடத்திற் கருகிய தமிழரைக்
கக்கத் தணைத்த காவலன் இவனே!

சான்றோர் நோன்பும் சத்தியக் குரலும்
மீண்டோர் தமிழன் முகிழ்ப்பான் என்ற
மாண்டார் தவமும் மனித்துவத் தர்மமும்
ஈண்டோர் தலைவனை எமக்காய்த் தந்ததே!

வாழி எம் தலைவன் வையம் போற்றிட
வாழி எம் தமிழ்த்தாய் வாழியெம் தாய்மண்
வாழி எம்மக்கள் வற்றா இன்புடன்
வாழிய வையம் வாழிய நன்றே!

- புலவர் சிவநாதன் -

# தமிழரின் அபிலாசைகள்

இனப்பிரச்சனைக்கு விரைவில் தீர்வு ஒன்று காணப்படும் எனக் கூறும் சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம், ஒருபுறம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை முடுக்கி விட்டுள்ள அதேவேளை, மறுபுறம் கூட்டணி போன்ற தமிழ்க்குழுக்களின் ஒத்துழைப்புடன் அதிகாரப் பரவலாக்கல் திட்டம் ஒன்றை நிறைவேற்றிவிடலாம் என நம்புகின்றது. இதன் காரணமாக, விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக ஓரங்கட்ட கூட்டணி போன்ற குழுக்களுடன் உறவாடி, சிறிலங்கா அரசாங்கம் அவர்களுக்குச் சில சலுகைகளையும் வழங்கத் தயாராக உள்ளது. ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தின் இத் திட்டமானது நடைமுறையில் எத்தனை தூரம் சாத்தியமானது என்பது சந்தேகமே. புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்கமுடியாது என்பது ஒருபுறம் இருக்க, சந்திரிகா அரசாங்கமோ அன்றித் தமிழ்க் குழுக்களோ தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யக்கூடிய திட்டம் ஒன்றை முன்வைக்கவில்லை. ஆகையினால், இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஒன்றை அவர்களால் கண்டுவிட முடியாது. இதனைப் பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ள சில பாராளுமன்ற உறுப்பினரே உணர்ந்தும் உள்ளனர். வெளிப்படுத்தியும் உள்ளனர். இந்த வகையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் எம்.பி ஆன அழகப்பெருமாவின் கருத்துக்கள் சுட்டிக்காட்டக்கூடியனவாகும். மாத்தளை மாவட்ட தேசிய சமாதானச் சபைக் கூட்டத்தில் பேசிய அவர், "தமது அபிலாசைகளை நிறைவேற்றப் போதிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்காது எனத் தமிழ் மக்கள் கருதுகின்றனர்" எனத் தெரிவித்தார். இதே சமயம் சிறிலங்கா அரசாங்கத்தால் சீராட்டப்படும் தமிழ்க் குழுக்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகப் பேசவில்லை. அவர்களில் அனேகர் தமிழ் மக்களுக்குச் சரியான வழி அமைத்துக் கொடுக்கவில்லை. ஆனால், தாம் விரும்பும் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். சிறிலங்கா அரசாங்கங்கள் நாட்டிற்கும் முழு உலகத்திற்கும் தமிழர்கள் அரசாங்கத்தில் பங்குபற்றுகின்றார்கள் எனக் காட்டி வந்தனர். ஆனால், உண்மையான நிலை எப்பொழுதும் அவ்வாறு இருந்ததில்லை எனவும் அழகப்பெருமா பேசிக்கொண்டார். அழகப்பெருமா தனது கருத்துக்களில் இனப் பிரச்சனைக்கான சரியான வழியை அரசாங்கம் தேர்ந்தெடுக்கவில்லை என்பதை இதன் மூலம் தெளிவு படுத்தியுள்ளார் என்றே கூறலாம். ஒருபுறம் சிறிலங்கா அரசாங்கம் என்னதான் இனப்பிரச்சனைக்கு தீர்வு கொண்டு வருவதாக கூறிக் கொண்டாலும் அதனை தமிழ் மக்கள் நம்பத் தயாராக இல்லை. இதற்கு, சந்திரிகா அரசாங்கம் உட்பட சிங்கள ஆட்சியாளர்கள் கடந்த காலத்திலும் சரி தற்காலத்திலும் சரி தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்கவும் இல்லை, அமுல்படுத்தவும் இல்லை என்பது சாட்சியாகவுள்ளது. இவ்வாறாக ஆட்சியாளர்களின் நிலைப்பாடு ஒருபுறம் இருக்க, அவர்களுடன் அனுசரித்துப் போகும் தமிழ்க்குழுக்கள் தமது சட்டைப் பைகளை நிரப்புவதையே தொழிலாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனரே ஒழிய, தமிழ் மக்களின் விருப்பு வெறுப்புக்களைப் பிரதிபலிக்கக் கூடியவர்களாகவோ அவர்களை வழி நடத்திச் செல்லக் கூடியவர்களாகவோ இருக்கவில்லை. வேறு விதமாகக் கூறுவதானால், ஆட்சியாளர்களுக்குச் சங்கடங்கள் விளைவிக்கும் எந்தவித முயற்சிகளையும் தமிழ் குழுக்கள் செய்யத் தயாராக இருக்கவில்லை. இவ் அனுசரிக்கும் போக்கானது இன்றுமட்டுமல்ல பண்டா – செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போதே ஆரம்பித்தது எனலாம். அன்று சமஷ்டியை வலியுறுத்தி வந்த தமிழரசுக்கட்சி, இறுதியில் பிரதமருக்கு ஏற்படக்கூடிய சங்கடங்களை மனதில் கொண்டு பின்வாங்கியது. இந்த நிலையில், அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத்திட்ட யோசனைகளோ அன்றி அவற்றிற்கு ஆதரவு வழங்கும் கூட்டணி போன்ற குழுக்களினாலோ இனப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. ஏனெனில், இவர்களின் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கையில்லை. ஆகையினால், இவர்களின் பேச்சோ அன்றி நடவடிக்கையோ தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தப் போவதில்லை.

இதன் காரணமாக, தமிழ் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான புலிகளின் ஒத்துழைப்பு இன்றி இனப்பிரச் சனைக்கு அரசாங்கத்தினால் தீர்வு ஒன்றைக் கொண்டு வந்தவிட முடியாது என்பது நிதர்சனமாகும்.

**சிறிலங்கா அரசாங்கம் என்னதான் இனப்பிரச்சனைக்கு தீர்வு கொண்டுவருவதாக கூறிக் கொண்டாலும் அதனை தமிழ் மக்கள் நம்பத் தயாராக இல்லை. இதற்கு, சந்திரிகா அரசாங்கம் உட்பட சிங்கள ஆட்சியாளர்கள் கடந்த காலத்திலும் சரி தற்காலத்திலும் சரி தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்கவும் இல்லை, அமுல்படுத்தவும் இல்லை என்பது சாட்சியாகவுள்ளது.**

www.tamilarangam.net



# முடிவுறாத காலக்கெடுக்கள்

சிறீலங்காவின் அரசியல் தலைமைகளும் சரி, இராணுவத் தளபதிகளும் சரி, விடுதலைப் புலிகளுடனான போரிற்கு காலக்கெடுக்களை விதிப்பதும். இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு காலநிர்ணயம் செய்வதும், பின்னர் மீண்டும் அவர்களாலேயே அக்காலக் கெடுக்கள் புதிப்பிக்கப்பட்டுவருவதும் புதுமையானவிடயமல்ல.

இந்தக் காலக்கெடுக்கள், ஒருவேளை பௌத்த சிங்களப் பேரினவாதிகளை சந்தோசத்தில் ஆழ்த்தவும், சிங்கள மக்களை ஏய்க்கவும் குறுகிய சிந்தனையுடன் அறிவிக்கப்பட்டு வருகின்றன. சிறீலங்காவைப் பொறுத்த வரை இக்காலக்கெடுக்கள் குறும் ஆயுளுடன் முற்றுப்பெறுவது காலங்காலமாக நடந்துவரும் ஒரு நடைமுறையாகியுள்ளது.

இந்தக் காலக்கெடுக்கள், சிங்களப் பகுதியில் தமக்கே உரித்தான மயக்க சூழலை, மாயையை தோற்றுவிக்கின்றதா? சிங்கள அரசதலைமையினதும் இராணுவத் தலைமையினதும் எதிர்பார்ப்பிற்கு அவை தீனிபோடுகின்றதா? என்பது ஒருபுறம் இருக்க, அவை தமிழ்மக்கள் மத்தியில் எந்தவிதமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்றால் ஒன்றுமே இல்லை என்பதுதான் பதிலாய் அமையும்.

**– சுப்பு –**

இனப்பிரச்சினை முறுகல் நிலையடைந்து, விடுதலைப் போராட்டம் ஆயுதமயப்பட்டு, சிறிது சிறிதாக முனைப்புற ஆரம்பித்தபோது, ஆரம்பித்த இக்காலக்கெடுக்கள், இன்று ஆயுதம் தழுவிய விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்து, வெற்றியை நோக்கிய தீவிர பாச்சலில் செல்லும் இக்காலகட்டத்திலும் விட்டகன்ற பாட்டைக் காணோம்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா சிறீலங்காவின் ஜனாதிபதியாக இருந்த காலத்தில், விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்ட, தெற்கில் இருந்து ஐம்பது ஐம்பது பொலிசாரை இராணுவத்திற்கு உதவிக்காக சுழற்சிமுறையில் யாழ்ப்பாணம் அனுப்பிவைத்தார். அவர்கள் துரையப்பா விளையாட்டரங்கிலும், கோட்டையிலும் தமது பணி நாட்களைப் போக்காட்டி, விடுமுறையைக் கழித்த சந்தோசத்தில் அவர்கள் மீண்டும் தெற்கிற்கு திரும்பிய அந்தக் காலத்தில் இருந்தே இந்தக் காலக்கெடுக்கள் அரங்கிற்கு வந்தன.

> தெளிந்த நீரோடைபோல், வரலாற்றுத் தெளிவுடன் பயணப்படும் ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு சிங்களஇனவாத அரசுகளோ அன்றி இராணுவத்தளபதிகளோ அல்லது வேறெந்த சக்திகளோ காலக்கெடுவை விதிக்கமுடியாது.

லலித் அத்துலத்முதலி, பாதுகாப்பமைச்சராய் இருந்த காலத்து காலக்கெடுக்கள் பின்னர் ரஞ்சன் விஜயரத்தினா அமைச்சராய் ஆன போது புதுவடிவங்களை எடுத்தன. ஆறுமாத மூன்று மாதக் காலக்கெடுக்களை அவர் அடிக்கடி அள்ளி வழங்கினார். செய்தியாளர்களைச் சந்திக்கும் போது ஏதாவது ஒரு காலக்கெடுவுடனேயே அவர் சந்திப்பது வழக்கமாகிவிட்டிருந்தது. பின்னர், விஜயதுங்கா காலத்திலும் அதன் சிறப்பு மறையாமல் பாதுகாக்கப்பட்டு, இன்று அது சந்திரிகா அனுருத்த வரையில் நீண்டுவந்துள்ளது.

ஆட்சிபீடம் ஏறும்போது, ஒரு வடத்திற்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட்டுவிடும் எனக் கால நிர்ணயம் செய்த சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா, இனப்பிரச்சினைத்தீர்வு குறித்து பல அறிவித்தல்களை வெளியிட்டு, இறுதியாக கடந்த வாரம் இன்னும் ஒரு காலக்கெடுவை வழங்கியுள்ளார். அதாவது ஆட்சிப்பொறுப்பேற்று மூன்று வருடங்கள் கடந்த நிலையில், அடுத்தவருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் என அறிவித்துள்ளார். அதற்குமுன்னர் விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவுக்கு வரும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பலத்தை பெருமளவில் அழித்துள்ளோம், யுத்தத்தை எண்பத்தைந்துவீதம் வெற்றிகொண்டுள்ளோம் என பெருமையடிக்கும், சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை, தனது காலக்கெடுவை, இவ்வருட இறுதியில் இருந்து அடுத்தவருடம் பெப்ரவரி மாதம் வரை நீட்டியுள்ளார்.

வெற்றி நிட்சயம் தந்த சந்தேகம் அவரது காலக்கெடுவை நீட்ட வைத்துள்ளபோதும், அரசியல் லாபங்கள் தேவைகள் காலக்கெடுவை அதிகப்படுத்தவிடாத எச்சரிக்கையையும் கொடுத்துள்ளது எனலாம். சிறீலங்காவின் ஐம்பதாவது சுதந்திர தினக்கொண்டாட்டத்தை பெப்ரவரி 4ம் திகதி கொண்டாடவுள்ள சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகளை வெற்றிகொண்ட செய்தியை, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை வெற்றிகொண்ட செய்தியை வெளியிட்டு, பெரும் அரசியல் அறுவடைக்கான கனவிற்கு தன்னை தயார் படுத்துகின்றது.

> நீண்டகாலப் பார்வை இன்றி, பின்விளைவுகள் குறித்த எச்சரிக்கை உணர்வின்றி குருட்டுத்தனமான முரட்டுப் பிடிவாதத்துடன் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் காலக்கெடுக்களுடன் பின்னிப்பிணைந்து சிக்கித்தடுமாறுகின்றன.

தற்போதைய சந்திரிகா அரசின் ஒவ்வொரு இராணுவ நகர்வுகளும், வெறும் அரசியல் லாபங்களுக்கான காய்நகர்த்தல்களாகவே அப்பட்டமாக வெளிப்பட்டு நிற்கின்றன. இங்கே நீண்டகாலப் பார்வை இன்றி, பின்விளைவுகள் குறித்த எச்சரிக்கை உணர்வின்றி குருட்டுத்தனமான முரட்டுப் பிடிவாதத்துடன் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் காலக்கெடுக்களுடன் பின்னிப்பிணைந்து சிக்கித் தடுமாறுகின்றன.

சிறீலங்கா அரசினால் பிரச்சாரப் படுத்தப்பட்ட தீர்வுப்பொதி, தமிழ் மக்களிடத்தே எந்தவித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. தீர்வுகுறித்த சிங்கள அரசின் காலநிர்ணயங்களும் அவர்களை களிப்படையவைக்கவில்லை. அது போன்று, விடுதலைப் போராட்டத்தை அழிக்க சிங்கள இராணுவத் தலைமைகளும் அரசியல் தலைமைகளும் கொடுக்கும் காலக்கெடுக்களும் தமிழ் மக்களை கலக்கமுறவைக்கவில்லை. ஒரு நீண்ட ஏமாற்றமும் துன்பமும் துயரமும் கொண்ட வரலாற்று அனுபவத்தை பாடமாகக்கொண்ட தமிழீழ மக்களிடத்தே சிங்களத் தலைமைகளின் அறிவித்தல்கள் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்துவதாய் இல்லை. தெளிந்த நீரோடைபோல், வரலாற்றுத் தெளிவுடன் பயணப்படும் ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு சிங்களஇனவாத அரசுகளோ அன்றி இராணுவத் தளபதிகளோ அல்லது வேறெந்த சக்திகளோ காலக்கெடுவை விதிக்கமுடியாது. மாறாக அதை நடத்திச்செல்லுகின்ற விடுதலை அவாவும் அந்தமக்கள்தான் அதற்கொரு காலக்கெடுவை விதிக்கமுடியும். அக்காலக்கெடு அந்த மக்களின் சுதந்திர நாளாகவே இருக்கமுடியும். ✵

## உலகத் திசையாவும் .....

வீரர்களை பலிகொடுத்து மூக்குடைபட்ட நிலையில் "வீரத்தை களத்தே போட்டு வெறுங்கையுடன், வியட்நாமில் இருந்து தலை தப்பினால் போதும்" என்று பின்வாங்கி ஓடியது.

மிக அண்மையில் சின்னஞ்சிறு சுண்டைக்காய் நாடான செச்சினியா, தனது மண்ணை ஆக்கிரமித்த உருசியப் படையை அடிக்குமேல் அடிகொடுத்து தனது மண்ணிலிருந்து துரத்தி ஓட்டியது.

அரசு என்பது மக்களது சம்மதத்துடன் நடைபெறும் ஆட்சியாகும் (Rule by consent). இதனைத்தான் பிரான்ஸ் நாட்டின் புகழ்பெற்ற சிந்தனையாளரும், தத்துவஞானியும் அரசியல் மேதையுமான ரூசோ தனது "சமுதாய ஒப்பந்தம்" (The Social contract) என்ற நூலில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

"மனிதன் பிறக்கும்போது சுதந்திர மனிதனாகவே பிறக்கிறான். ஆனால் எங்கு பார்த்தாலும் அவன் அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளான். மற்றவர்களது எசமானர்கள் என்று தங்களை நினைப்பவர்கள்தான் அசல் அடிமைகளாக எண்ணப்படுவர்"

"Man was born free, and he is everywhere in chains. Those who think them selves the masters of others are indeed greater slaves than they"

இந்த வாசகத்தோடுதான் 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூல் ஆரம்பிக்கிறது.

மக்களாட்சி இல்லாத, மன்னர் ஆட்சி இருந்த காலத்தில் கூட, குடி தழி இக்கோலோச்சும் மன்னர்கள்தான் இருந்தார்கள்.

**குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு**

(குறள் 544)

என்பது வள்ளுவர் வாக்கு. குடிமக்களை அணைத்துச் செங்கோல் செலுத்தும் மன்னன் அடியை உலகோர் பொருந்தி நிற்பர். அணைத்தல் என்பது இன்சொல் சொல்லுதலும், தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தல் முதலாயின. மன்னன்மீது மக்கள் நீங்கா அன்புபூண்டவர் ஆகலின், "அடிதழீ நிற்கும்" என்று கூறப்பட்டது. செங்கோன்மைபற்றி ஒரு முழு அதிகாரமே வள்ளுவர் படைத்திருக்கிறார்.

**வேலன்று வென்று தருவது–மன்னவன்**
**கோலதூம் கோடாது எனின்**

(குறள்–546)

மன்னவனுக்குப் போரின்கண் வெற்றியைக் கொடுப்பது அவன் போர்க்களத்தில் எதிரியின் மீது எறியும் வேலன்று. முறைதவறாத வெற்றியைப் பெற்றுத்தரும். தங்களது செங்கோல் வளையக்கூடாது என்பதில் தமிழ் மன்னர்கள் தீவிர பக்தி காட்டினார்கள்.

**கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று**
**வெள்வேற் கொற்றம்–காண்**

பாண்டியன் நெடுஞ்செழியன் கையில் ஒற்றைச் சிலம்புடன் நிற்கும் கண்ணகியைப் பார்த்து "பெண் அணங்கே! கள்வனைக் கொல்வது கடுங்கோன்மை அன்றே, அது முறைதவறாது கோலோச்சும் மன்னன் கடமை, அரச நீதி" என்கிறான். கண்ணகி மாணிக்கக் கற்களையுடைய தனது காற்சிலம்பை உடைத்து தன் கணவன் கள்வன் அல்லன் என்று நிரூபிக்கிறாள்.

பாண்டியன் நெடுஞ்செழியன் பதறிப் போகிறான். தனது செங்கோல் வளைந்துவிட்டது என்பது உணர்ந்து,

**பொன்செய் கொல்லன்–தன்சொற்கேட்ட**
**யானோ அரசன்? யானே கள்வன்!**
**மன்பதை காக்கும் தென்புலம் காவல்**
**என்முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்!**

என மன்னவன் மயங்கி வீழ்ந்து உயிரைப் போக்கிக்கொள்கிறான்.

மன்னர் ஆட்சி இப்போதில்லை. மக்கள் ஆட்சி நடைபெறுகிறது. ஆனால், இந்த மக்களாட்சியில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை காலில் போட்டு சிங்கள – பௌத்த இனவெறியர்கள் மிதிக்கிறார்கள். முற்றிலும் சிங்களவர்களை கொண்ட இராணுவம் தமிழ் மக்களது உயிர்களை கிள்ளுக்கீரை என மதித்து சுட்டுத்தள்ளுகிறது. மலராத பச்சிளம் மொட்டுக்கள் கூட அந்தக் காமுகர்களால் கசக்கி எறியப்படுகிறார்கள்.

குற்றமற்ற தன் கணவன் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டதை எதிர்த்து, கண்ணகி முழு மதுரையையுமே தீக்கிரையாக்கினாள். அப்படியென்றால், தமிழ் மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவிக்கும் சிங்கள ஆட்சியாளர்களுக்கும், இராணுவத்திற்கும் எதிராக எத்தனை மதுரைகள் தீக்கிரையாக்கப்பட வேண்டும்?

தமிழ் மண்ணை சிங்கள – பௌத்த இனவெறிபிடித்த இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் வரை தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ முடியாது. தமிழ் மக்களது நிம்மதி குலைந்து நாலு சகாப்தங்களுக்கு மேலாகி விட்டது.

ஒரு சுதந்திர, இறைமையுள்ள, பலம்வாய்ந்த தமிழீழமே, தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழ வழி சமைக்கும். வன்னி மண்ணில் தமிழீழ விடுதலைப் புலிகள் அன்னிய ஆக்கிரமிப்புப் படைக்கெதிராக வரலாறு காணாத வீரத்துடனும் விவேகத்துடனும் போராடுகிறார்கள். எங்கள் மண் மட்டுமல்ல, எங்கள் கடலும் உங்களுக்குச் சொந்தமாக வேண்டும். கடற்புலிகள் புல்மோட்டையில் தொடுத்த தாக்குதல் அதற்கான ஆரம்பமாகும். எங்கள் மண்ணையும் எங்கள் கடலையும் எங்களுக்கே சொந்தமாக்கி சிங்கள– பௌத்த ஏகாதிபத்தியவாதிகளின் கனவுகளைப் பொய்யாக்குவோம்! உலகத் திசையாவும் தமிழன் அரசாளும் வேளை

**புலரும் – இங்கு ஒருநாள்!**
**விடுதலைப் புலிகள் படைசென்று பகைவர் படைவென்று**
**புலரும் பொழுதொன்று எமது திருநாள்!**

www.tamilarangam.net



# உலகத் திசையாவும் தமிழன் அரசாளும் வேளை புலரும் இங்கு ஒரு நாள்!

**பொ**ய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டும் என்பார்கள்.

ஆனால், சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்காவிற்கு பொய்யே சொல்லிச் சொல்லிப் பழக்கப்பட்டு விட்டதால் அவரது வாயில் மெய்யே வருவதில்லை.

கிட்லரின் நாசி சேர்மனியில் கோயபல்சுக்கு என்ன பாத்திரம் அளிக்கப்பட்டதோ அதே பாத்திரத்தைத்தான் சந்திரிகா அரசு சரத் முனசிங்காவிற்கும் கொடுத்திருக்கிறது.

ஒரு பொய்யை மீண்டும் மீண்டும் சொல்வதன் மூலம் மக்களை நம்பவைத்துவிடலாம் என்பதுதான், நாசி சேர்மனியில் பிரச்சார அமைச்சராக இருந்த டாக்டர் யோசேப் கோயபல்ஸ் அவர்களது கோட்பாடாகும்.

சேர்மனியின் நாசி இராணுவம், உருசிய துருப்புகளிடம் செம்மையாக அடி வாங்கிக் கொண்டு பலத்த இழப்புக்கள் மத்தியில் பின்வாங்கிக்கொண்டிருந்த வேளையில், (1945) கோயபல்ஸ்

**- நக்கீரன் -**

சேர்மனியின் இராணுவம் யுத்த களத்தில் வெற்றிமேல் வெற்றியை குவித்த வண்ணம் எதிரியோடு பொருதுவதாக பத்திரிகைகள் வாயிலாகவும், வானொலி வாயிலாகவும் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தான்.

உருசியாவின் செஞ்சேனை பேர்லின் நகர எல்லைக்குள் புகுந்தபின்தான், கோயபல்ஸ் தனது குடும்பத்தோடு தற்கொலை செய்துகொண்டான்.

பிரிகேடியர் சரத் முனசிங்கா தற்போதைக்கு தற்கொலை செய்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அந்தக் காலம் வெகுவிரைவில் வரும்.

ஒருவிதத்தில் சரத் முனசிங்கா கொடுத்து வைத்தவர். யுத்த களத்தில் சிங்கள இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் மூர்க்கத்தனமான தொடர் தாக்குதலால் செத்து மடியும்போது, இவர் பத்திரமாகக் கொழும்பில் இருந்துகொண்டு விடுதலைப் புலிகளை வாய்மூலம் கொன்று வருகிறார்.

உண்மையில் சிங்கள இராணுவத்தினரால் போர்முனையில் கொல்லப்படும் விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையை விட இவரால் கொல்லப்படும் விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை மிகக்கூடிய தாகும்.

ஒரு இராணுவ ஆய்வாளர் குத்தலாகக் குறிப்பிட்டதுபோல, கடந்த ஐந்து ஆண்டுகளில் சிங்கள இராணுவத்தினரால் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் கூட்டுத்தொகை யாழ்ப்பாணக் குடா நாட்டின் மக்கள் தொகையைவிட அதிகமாக இருந்துவிடும்.

எங்கள் முன்னோர்கள் அறங்கள் பத்து என வரையறை செய்துள்ளார்கள். "அறநெறிச் சாரம்" என்ற நீதி நூலை இயற்றிய முனைப்பாடியார் என்ற புலவர், அந்தப் பத்து அறங்களையும் ஒரு பாடலில் தொகுத்துத் தந்திருக்கிறார். பாடல் இது:

மெய்மை, பொறையுடைமை, மேன்மை, தவம், அடக்கம்
செம்மை, ஒன்றுஇன்மை, துறவுடைமை -
நன்மை திறம்பா விரதம் தரித்தலோடு
இன்ன அறம்பத்தும் ஆன்ற குணம்
(அறநெறிச்சாரம்-10)

உண்மை, பொறுமை, பெருமை, தவம், அடக்கம், நடுவுநிலைமை, தனக்கென ஒன்றும் இல்லாது பொதுநலனுக்காக உழைத்தல், பற்றுவிடுதல், நல்லன செய்தல், மாறுபடாத நோன்புகளை மேற்கொள்ளல் ஆகிய இந்த அறங்கள் பத்தும் மேலான குணங்களாகும்.

(மேன்மை - பெருமை, செம்மை - நடுவுநிலைமை, திறம்பா - மாறுபடாத, ஆன்ற - மேலான)

துரதிட்டவசமாக பிரிகேடியர் சரத் முனசிங்காவிற்கு இந்தப் பாடலைத் தெரிந்திருக்க நியாயமில்லை.

இதனால் இராணுவத் தலைமையகத்தில், பொய்களை மூட்டை மூட்டையாகக் கட்டி வைத்துக்கொண்டு, தினமும் பொய் பொய்யாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

அண்மையில், அப்படிப் பொய் மூட்டைகளை அவிழ்த்துவிடப் போய், கொழும்புப் பத்திரிகையாளர்களிடம் வகையாக மாட்டிக்கொண்டார். சரத் முனசிங்காவின் பொய்களுக்கு, 'யுத்த நகைச்சுவை' (War Humour) என ஒரு கட்டுரையாளர் நாமகரணம் செய்துள்ளார்.

புளியங்குளத்தைப் பிடித்துவிட்டதாகவும், சிறிலங்கா இராணுவத்தின் 53வது படையணியும், 55வது படையணியும் புளியங்குளத்தில் இணைந்து விட்ட தாகவும், புளியங்குளத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவித்து விட்ட தாகவும், புளியங்குளத்தை சிங்கள இராணுவம் கைப்பற்றியதன் மூலம் புதிய வரலாறு படைத்துவிட்டதாகவும் சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள செய்தித் தொடர் சாதனங்கள் பிரசாரம் செய்தன.

குறிப்பாக ஏரிக்கரைப் பத்திரிகைகளில் ஒன்றான டெய்லி நியூஸ், புளியங்குளத்தை சிங்கள இராணுவம் கைப்பற்றிவிட்டதாகக் கடந்த யூலை மாதம் கொட்டை எழுத்தில் செய்தி வெளியிட்டது.

அதன்பின்னரும் பலமுறை புளியங் குளத்தை இராணுவம் பிடித்துவிட்டதாகச் செய்திகள் அவ்வப்போது வெளிவந்தன.

இருக்கிறது ஒரேயொரு புளியங் குளந்தான்- அதை எத்தனைதரம் பிடிக்கப்போகிறார்கள் என்பது தெரிய வில்லை.

ஜெயசுக்குறுய் இராணுவ நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டு சரியாக ஐந்து மாதங்களுக்கு மேலாகிவிட்டன.

தூரத்தையே இராணுவம் கடந்துள்ளது.

இந்த 21 கி. மீ தூரத்தையும் கடக்க இராணுவம் மிகப் பெரிய விலை கொடுத்துள்ளது.

அரசத்தரப்புக் கணக்குப்படியே அதிகாரிகள் உட்பட 600 இராணுவத்தினர் யுத்தத்தில் கொல்லப்பட்டுள்ளனர். மூவாயிரத்து ஐந்நூறு இராணுவத்தினர் காயப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில்

> உருசியாவின் செஞ்சேனை பேர்லின் நகர எல்லைக்குள் புகுந்தபின்தான், கோயபல்ஸ் தனது குடும்பத்தோடு தற்கொலை செய்துகொண்டான். பிரிகேடியர் சரத் முனசிங்கா தற்போதைக்கு தற்கொலை செய்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அந்தக் காலம் வெகுவிரைவில் வரும்.

பெரும்பாலானோர் நடமாடும் காயம்பட்டோர் (wolking wounded) ஆவர்.

ரிவரேசா இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாணத்தைப் பிடித்தபோது இராணுவத்தரப்பில் 450 பேர் இறந்தார்கள் 3331 இராணுவத்தினர் காயப்படுத்தப் பட்டார்கள்.

ஆனால், வவுனியா - கிளிநொச்சித் தரைப்பாதையின் முதல் 21 கி.மீ பிடிக்க இராணுவம் காயப்பட்டோரையும் சேர்த்து 4,100 இராணுவத்தினரை இழந்துள்ளது.

இது மொத்த இராணுவ பலத்தில் 20 விழுக்காடாகும்.

ஒவ்வொரு கி.மீ தூரத்திற்கும் 30 இராணுவத்தினர் பலி கொடுக்கப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தின் பெரும் இழப்புக்கு குறைந்தது நான்கு காரணங்களைச் சொல்லலாம்.

1. இந்த யுத்தத்தில் விடுதலைப் புலிகள்

3. வன்னியின் பூகோள அமைப்பும், நிலமும், யாழ்ப்பாணக் குடாநாடு போலல்லாது ஒரு கெரில்லா யுத்தத்திற்கு ஏற்ற மிக வாய்ப்பான களமாக இருக்கிறது.

4. தமிழ் மண்ணில் கால்பதித்து அதனை ஆக்கிரமிக்க பகீரதப் பிரயத்தனம் செய்யும் அன்னியப்படையான சிங்கள இராணு வத்தை எப்படியும், என்ன விலை கொடுத்தும் துரத்தியடிக்க வேண்டும் என்ற விடுதலைப் புலி வீரர்களின் ஆவேசம்.

ஒரு இராணுவம் தனது தோல்விகளை மூடிமறைக்க அல்லது பூசிமெழுக எதிர்த்தரப்பு இராணுவத்தின் இழப்புக் களை மிகைப்படுத்திக் கூறுவது வழக்கமாகும்.

இரண்டாவது மகாயுத்தத்தில் நேசநாடுக ளின் துருப்புக்கள் பலத்த ஆள், ஆயுத இழப்புக்களுக்கு உள்ளாகி பின்வாங்கி ஓடியபோதெல்லாம் பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்சன் சர்ச்சில், "எமது படைகள் 'வெற்றிகரமாகப் பின்வாங்கியது" என்று புழுகிக்கொண்டிருந்தார்.

இதைத்தான் பிரிகேடியர் செய்யப்போய் நிருபர்களிடம் மாட்டுப்பட வேண்டி வந்தது.

**நிருபர்:** ஜெயசிக்குறுய் ஆரம்பிக் கப்பட்டதன் பின் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

**பிரிகேடியர்:** விடுதலைப் புலிகள் இதுவரையில் படுதோல்விகளைச் சந்தித்து இருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் 2,000 விடுதலைப் புலிகள் கொல்லப் பட்டிருக்கிறார்கள். 3,500 விடுதலைப் புலிகள் காயப்பட்டிருக்கிறார்கள்.

**நிருபர்:** இந்த இராணுவ நட வடிக்கையின் ஆரம்பத்தில் எத்தனை விடுதலைப் புலிகள் இருந்தார்கள்?

**பிரிகேடியர்:** 6,000 விடுதலைப் புலிகள் இருந்திருப்பார்கள் என்று நாங்கள் மதிப்பிட்டோம்.

**நிருபர்:** அப்படியென்றால் 2,000 விடுதலைப் புலிகள் இறந்துவிட்டார்கள், 3,500 விடுதலைப் புலிகள் காயம்பட்டுவிட்டார்கள். ஆக மிகுதி 500 விடுதலைப் புலிகளே இருக்கிறார்கள். அப்படியென்றால் 500 விடுதலைப் புலிகளை எதிர்த்து 20,000 இராணுவத்தினர் சண்டை செய்கிறார்களா?

பிரிகேடியர்: அப்படி இருக்கலாம். எஞ்சிய விடுதலைப் புலிகளையும் அழித்து விடுவோம்.

இந்தக் கேள்விகளும் பதில்களும் நிருபர்கள் மத்தியில் சிரிப்பலைகளை வரவழைத்தன.

சிரிக்கப்படும் மனிதராக பிரிகேடியர் சரத் முனசிங்கா விளங்குகிறார்.

ஒரு யுத்தத்தில் எதிரியின் படை பலத்தையும், படைக்கலப் பலத்தையும்

## விடுதலைப் புலிகள் படைசென்று, பகைவர் படைவென்று, புலரும் பொழுதன்று எமது திருநாள்!

இந்த இராணுவ நடவடிக்கைக்கு 20,000 இராணுவத்தினர் வவுனியாவில் குவிக்கப்பட்டனர்.

வவுனியா - கிளிநொச்சிக்கு இடையிலான 76 கி.மீ தூரம் தரைப்பாதையைத் திறப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட பெரும் எடுப்பிலான ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை இதுவரை 21 கி. மீ தூரத்தைத்தான் கடந்துள்ளது. அதாவது நாலில் ஒரு பங்குக்கு சற்றுக் கூடுதலான

இராணுவம் பறித்தெடுத்த அதிசக்தி வாய்ந்த ஆட்லறி மற்றும் குண்டுகளை ஏவி எதிர்த்தாக்குதல் நடாத்துகிறார்கள்.

2. இரண்டு வருட காலத்தில் சிறிலங்கா விமானப் படை மொத்தம் 19 விமானங்களை இழந்துள்ளது. முன்னே றும் இராணுவத்துக்கு உதவியாக முன்புபோல் போதிய ஆகாயப் பாதுகாப்பு (Air cover) கொடுக்க முடியாத நிலையில் உள்ளது.

குறைத்து மதிப்பிடக்கூடாது என்பது யுத்த சாத்திரம் கற்பித்துக்கொடுக்கும் பாலபாடமாகும்.

இந்த பாலபாடத்தைப் படிக்க மறுத்த நெப்போலியன், கிட்லர், முசோலினி போன்ற சர்வாதிகாரிகள் அழிந்தொழிந்தார்கள்.

அமெரிக்க வல்லரசு 50,000 போர்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

www.tamilarangam.net



### யாழ் குடாநாட்டில் போரின் போக்கு மாறுகிறது

# விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரிப்பு

## இராணுவத்தினரிடையே பலத்த தடுமாற்றங்கள்

**யாழ்.** குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தின் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. ரோந்து அணிகள் மீதான தாக்குதல்களுடன் தடுமாறிக் கொண்டிருந்த சிங்களப் படையினர் தற்பொழுது தமது இராணுவ நிலைகள் மீதான தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் வேகப்படுத்தப்பட்டதை அடுத்து பலத்த அச்சத்துடன் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

யாழ் இறக்கா வீதியில் உள்ள வளவொன்றில் ஒரு தேங்காய் மரத்திலிருந்து விழுந்த சத்தத்திற்குக் கூட பலமாக அச்சமுற்ற சிறிலங்கா இராணுவத்தினர், சரமாரியான முறையில் துப்பாக்கிப் பிரயோகத்தினை யாழ்ப்பாணத்தில் நடத்தியுள்ளனர். அதேவேளை யாழ் குடாநாட்டில் இம் மாதம் 2ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் சிங்களப் படையும் காவற்துறையும் விடுதலைப் புலிகள் என எண்ணித் தமக்குள் சுட்டுக் கொண்டதில் 2 பேர் கொல்லப்பட்டு, இருவர் காயமடைந்துள்ளனர். அத்துடன் கடும் அச்சம் காரணமாக பொதுமக்களுக்கு விநோதமான கட்டளைகளை விதித்து வருகின்றனர். கொக்குவில், கல்வியங்காடு பகுதிகளில் வீதியோர மரங்களையும் ஒழுங்கைகளில் உள்ள மரங்களையும் வெட்டி அகற்றுமாறு படையினர் உத்தரவிட்டுள்ளனர். அதேவேளை, வீதியை அடுத்து வீட்டுவளவுக்குள் இருக்கும் மரங்களை வெட்டிவிடுமாறும், வீதியோர வேலிகள் முழுமையாக அடைக்கப்படாமல் கீழ்ப்பகுதி திறந்தபடி இருக்க வேண்டுமெனவும் புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மக்களின் நடமாட்டங்கள் தடை முகாம்களில் கடுமையான முறையில் அவதானிக்கப்படுவதுடன், மக்களைத் தாக்குவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். யாழ் முத்திரைச் சந்தியில் இரவு ஏழு மணிக்குப் பின்னர் செல்லும் மக்கள் எவ்வித காரணங்களுமின்றி சிங்கள இராணுவத்தினரால் நையப்புடைக்கப்படுகின்றனர்.

ஆயினும், விடுதலைப் புலிவீரர்கள் வெற்றிகரமான முறையில் பல தாக்குதல்களை நடாத்தி வருவதை அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் உறுதி செய்கின்றன.

வரணியில் 11ஆம் திகதி அதிகாலை காவலரண்கள் மீது தாக்குதலைத் தொடுத்த விடுதலைப் புலிகள் அக் காவலரண்கள் இரண்டை முற்றாக அழித்தொழித்தனர். இதனால் ஆத்திரமடைந்த சிங்களப் படையினர், பொதுமக்கள் மீதும் குடியிருப்புக்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தம்பு சின்னப்பிள்ளை(69) என்பவர் பலியாகியதுடன், சதாசிவம் விக்னேஸ்வரன் (13) எனும் சிறுவன் படுகாயமடைந்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் குடாநாட்டுத் தாக்குதல்கள் தொடராக நிகழ்கின்றன. 3ஆம் திகதி படையினரின் வாகனம் ஒன்று தாக்கப்பட்டது. அதேதினம் நெடுங்கேணியில் மாலை 5.30 மணிக்கு உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் தாக்குதலுக்கு உள்ளாகினர். ஐவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட, சிலர் படுகாயமடைந்துள்ளனர்.

இதற்கிடையில், யாழ் குடாநாட்டில் இராணுவ முகாம்களுக்கு அருகிலுள்ள தமிழ் மக்களைத் தூர இடங்களுக்கு அகன்று செல்லுமாறு விடுதலைப் புலிகள் துண்டுப் பிரசுரங்கள் வழங்கியுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகைகள் கலக்கம் தெரிவித்துள்ளன. அவர்களுடைய கலக்கத்தை அதிகரிப்பது போல் தாக்குதல்கள் வேகமடைந்து செல்கிறது.

கொடிகாமம் நாவலடிப் பகுதியில் 6ஆம் திகதி மாலை 7.30 மணியளவில் சிங்களப் படை மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் 7ஆம் திகதி காலைவேளையில் இரண்டு மணி நேரமாக ரோந்துப் படையினருடன் புலிவீரர்கள் பலத்த துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர். இழப்புக்கள் தெரியவரவில்லை. 10ஆம் திகதி வடமராட்சி வதிரிச் சந்திக்கு அருகே புலிவீரர்கள் நடாத்திய தாக்குதலில் ரோந்தில் ஈடுபட்ட 4 படையினர் கொல்லப்பட்டனர். புலிவீரர்கள் தரப்பில் எவ்வித இழப்புகளும் இல்லை.

11ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் கைதடிப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட, 3 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதலிலும் விடுதலைப் புலிகள் தரப்பில் இழப்புக்கள் ஏற்படவில்லை.

மீளவும் வதிரியில் 12ஆம் திகதி மாலைவேளை சுமார் முப்பது நிமிட சமர் நடைபெற்றது. இதில் 4 படையினர் படுகாயமடைந்தனர்.

மறுநாள் 13ஆம் திகதி வரணிக்கு அண்மையில் கனகம்புளியடி – கொடிகாமம் வீதியில் உள்ள கெருடாவிலில் இடம்பெற்ற தாக்குதலிலும், அதையடுத்து அன்று மாலை கச்சாய் பகுதியில் நடைபெற்ற தாக்குதலிலும் சிறிலங்கா இராணுவத்தினர் சிலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

14ஆம் திகதி சாவகச்சேரி சங்கத்தானையில், வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலிலும் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் வசமிருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இத்தாக்குதலிலும் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்புக்களும் ஏற்படவில்லை.

தொடர்ந்தும் தாக்குதல்கள் பரவலாக நடைபெற்று வருகின்றது. ✷

## அவமானகரமானது

"ராக்கிங்" என்ற சித்திரவதைக்குள்ளான பேராதனைப் பல்கலைக்கழக முதலாம் ஆண்டு பொறியியல்பீட மாணவர் ஒருவர் பரிதாபகரமாக மரணமாகியுள்ளார். இத்துயரச் சம்பவத்திற்கு சிரேஷ்ட மாணவர்களின் வக்கிரபுத்தியே காரணம் என்று கூறுவதில் எதுவித தவறுமில்லை. சிரேஷ்ட மாணவர்களின் இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கையால் எதிர்காலச் சமூகத்தில் பெரும் பங்காற்றக்கூடிய ஒரு மாணவன் இவ்வாறு ஒழிக்கப்பட்டுள்ளதோடு அவனது பெற்றோரின் அபிலாசைகள், கனவுகள் யாவும் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் அம்மாணவனால் நாட்டுக்கு ஆற்றக்கூடிய பங்களிப்பு கிடைக்காமல் போயுள்ளது. "ராக்கிங்" என்ற ரீதியில் மேற்கொள்ளப்படும் வதைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்பதில் கேள்விக்கு இடமில்லை. இதற்கு ஆதரவாகக் கூறப்படும் நியாயங்கள் காரணங்கள் யாவும் வறட்டுத்தனமான வாதங்கள். இது ஒருவகை வக்கிரத்தின் வெளிப்பாடு. புதிய மாணவர்களுடன் உறவை, நட்பை வளர்த்துக் கொள்ள ஒரு மார்க்கமாகக் கூறப்படுவது வெறும் ஏமாற்றுத்தனமானது. நட்பும், நல்லுறவும் ஒருவரின் வதைகளின் மூலம் உருவாகும் எனக்கூறுவது நாகரீக உலகில் அவமானகரமான வாதமாகும். ஆகையினால் ராக்கிங் ஒழிக்கப்படவேண்டும் என்பதில் இரண்டாவது பேச்சுக்கு இடமில்லை. இவை ஒருபுறம் இருக்க ராக்கிங் விவகாரத்தில் கொல்லப்பட்ட மாணவன் ஒரு தமிழ் மாணவன் என்பதும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் சிரேஷ்ட தமிழ் மாணவர்கள் என்பதும் மிகவும் வெட்கக்கேடான ஒன்றும் கவலை அளிக்கக்கூடிய ஒன்றும் ஆகும். இது ஒரு வகையில் தமிழ் சமூகத்திற்கு ஏற்பட்ட தலைக்குனிவு என்று கூடக் கூறலாம். அதாவது எமது கலை பண்பாட்டுக்கு விரோதமான, வக்கிரமான செயல்பாட்டின் மூலம் தமிழ் மாணவர் சமுதாயத்திற்கு வரும் தலைக்குனிவை இதில் சம்பந்தப்பட்ட சிரேஷ்ட மாணவர்கள் ஏற்படுத்தியுள்ளனர். அதிலும் ஒடுக்கு முறைக்கு எதிரான ஒரு நீண்ட போராட்டத்தில் தமிழ் மக்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் வக்கிரபுத்தியின் அடிப்படையில் தமிழ்மாணவ சமூகத்தில் ஒரு பகுதி சிறிதாகக் கூட இருக்கலாம், செயற்படுவது என்பது பெரும் அவமானகரமானதாகும். இதைத்தவிர இச்சம்பவமானது தமிழ் மக்களுக்கு பெரும் இழப்பானதும் கூட. மாணவன் ஒரு தமிழ் மாணவன் என்பதால் தமிழ்ச் சமுதாயம் பொறியிலாளர்களையும் இழந்துள்ளது எனலாம். அதாவது இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டதாக தற்பொழுது கருதப்படும் அல்லது குற்றம் சாட்டப்படும் ஏழுபேரும் கூட கல்வியைத் தொடரமுடியாமல் போகும் போது அது தமிழ் சமூகத்தின் இழப்பேயாகும். இவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால் இவர்கள் எதிர்காலம் அற்றவர்கள் ஆவார்கள். ஏற்கனவே சிங்களப் பேரினவாதம் தமிழர்களின் பல்கலைக்கழக அனுமதிக்குப் பெரும் வெட்டுக்களை செய்துள்ளது. இன்று பல்கலைக்கழகத்திற்கு அதுவும் பொறியியல் பீடத்திற்கு தெரிவாவது என்பது முயற்கொம்பு போன்றவொரு விடயமே. இந்நிலையில் 8 தமிழ் மாணவர்கள் அத்துறையைவிட்டு இல்லாது போனது பாரிய இழப்பு என்பதில் ஐயத்துக்கு இடமில்லை. அத்தோடு ராக்கிங்கால் பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோருக்கு ஏற்பட்டது போன்று ராக்கிங் புரிந்த மாணவர்களின் பெற்றோர்களும் பாதிப்புக்கே உள்ளாகியுள்ளனர். அவர்களது கற்பனைகளும் ஆசைகளும் கூட பிரயோசனம் இல்லாமல் போகின்றன. இம்மாணவர்களுக்கு சிறுவயதில் இருந்து கற்பித்து வந்த பெற்றோர்கள் மேற்கொண்ட முயற்சிகள், உழைப்புக்கள், செய்த செலவீடுகள் யாவுமே அர்த்தமற்றவையாக மாறிவிடுகின்றது. துயரே அவர்களுக்கும் மிஞ்சுகின்றது. இந்த நிலையில் ராக்கிங், தனியாக இதனால் பாதிக்கப்படும் மாணவர்களை மட்டுமல்ல இதனை மேற்கொள்ளும் மாணவர்களுக்கே பாதிப்பை உள்ளடக்கக்கூடியதாகும். அத்துடன் இதனோடு சம்பந்தப்பட்ட பெற்றோர்கள் மற்றும், அவர்களது சமூகம் என மிக ஒட்டுமொத்தமாகவே பாதிப்பை விளைவிக்கக்கூடியதாகும். ஆனால், இதனைச் சட்டத்தினால் இல்லாது ஒழிக்க முடியுமா என்பது சந்தேகமே. இதனை மாணவர்களின் மனமாற்றமும் விழிப்புணர்வுமே இல்லாதொழிக்கவல்லது. ஆனால், இதற்காக சட்டங்களினால் ஒட்டுமொத்தப் பயன் இல்லை என்பதல்ல. குற்றம் இழைப்பவர்களைத் தண்டிக்க சட்டங்கள் அவசியமானதே. ✷

### வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை 19- 12 - 1997 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**



www.tamilarangam.net



# சிறிலங்கா அரசின் இராணுவ இலக்காக தமிழ்ச் சிறுவர்கள்

சிறிலங்கா தான் ஆக்கிரமித்துள்ள தமிழீழப் பகுதிகளில் மட்டுமல்ல, ஆக்கிரமிப்புக்காகப் போரைத் தொடுத்துள்ள பிரதேசங்களிலும் தமிழ்ச் சிறுவர்களை இராணுவ இலக்காக்கிச் செயற்பட்டு வருகிறது. 1989ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டு 1990 முதல் அமுலுக்கு வந்த 'சிறுவர்களின் உரிமைகள்' எனும் ஐக்கிய நாடுகள் வழக்காற்றினை நேரடியாகவும் பகிரங்கமாகவும் வன்முறைப்படுத்தும் வகையில் சிறிலங்கா அரசு செயற்பட்டு வருகிறது.

இந்தச் சிறுவர்களின் உரிமை மரபுசாசனத்தின் 2வது பிரிவு "18 வயதுக்கு உட்பட்ட எல்லா மனிதர்களும் சிறுவர்கள்" என்ற வரைவிலக்கணத்துள் அடங்குவர் எனக் கூறுகிறது. அத்துடன், ஒவ்வொரு அரசும் சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு உள்ளது எனவும் எடுத்து விளக்குகிறது. ஆனால், சிறிலங்கா அரசு தமிழ்ச் சிறுவர்களைப் பகிரங்க இனஅழிப்புக்கு உள்ளாக்குவதும் அல்லாமல் மனிதாயத்துக்கு எதிரான குற்றச் செயல்களை எவ்வித அச்சமுமின்றி அவர்கள் மேல் செய்து வருகிறது.

சிறுவர்களின் உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவு தடை செய்யப்பட்டுள்ளது. மருந்துகள், நோய்த் தடுப்பு ஊசிகள் கூட மறுக்கப்படுகிறது. சிறுவர்களின் உளவியல் வளர்ச்சியைப் பாதிக்கக்கூடிய வகையில் பாடசாலைகள், பொதுஇடங்கள், வைத்தியசாலைகள், கோவில்கள் போன்ற பகுதிகளில் பாதுகாப்புத் தேடும்படி சிறிலங்காவால் அறிவிக்கப்பட்டு அவ்விடங்களை குறிவைத்து திட்டமிட்ட குண்டு வீச்சுக்கள், ஏறிகணைத் தாக்குதல்கள் என நடாத்தப்படுகிறது.

சிறுவர்களுக்கான ஐக்கியநாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனமான யுனெஸ்கோவின் அடிப்படைப் கோட்பாடுகளையே வன்முறைப்படுத்தும் வகையில் தமிழ்ச் சிறுவர்களின் கல்வியினை சிறிலங்கா மறுத்து வருகிறது. அதுவும் குறிப்பாக, வரண்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு அவர்கள் தொழில் முயற்சிகளைப் பெறுவதற்கான பொருளாதார முதலீடாக கல்வி அமைவதினால் கல்விக்கு ஏற்படுத்தப்படும் தடைகள் அடிப்படை மனித உரிமைகளை வன்முறைப்படுத்தும் செயலாக மாறுகிறது. இதுவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை தமிழ் மக்கள் தொடங்க வேண்டியதன் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான வரலாற்றுக் காரணியாகத் தொடர்கிறது.

ஆனால் தமிழீழ மண், சந்திரிகா அரசினால் பாரிய ஆக்கிரமிப்புக்கு உள்ளான இன்றைய நிலையில், சிறிலங்கா அரசு சிறுவர்களை இராணுவ இலக்காக்குவதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன. ஒன்று, தமிழீழத்தின் எதிர்கால சந்ததியை போசாக்கற்ற – கல்வியறிவற்ற – தொழில்நுட்ப திறமையற்ற சந்ததியாக மாற்றுவது. இரண்டாவதாக, தற்போது நடைபெறும் போராட்டத்தைப் பல வீனப்படுத்துவதற்கான மனோநிலைக்கு மக்களைக் கொண்டு வருவதற்கு சிறுவர்கள் இலக்காக்கப்படுகிறார்கள்.

பள்ளி மாணவியான கிருசாந்திக்கு நடாத்தப்பட்ட பாலியல் வன்முறையையும் இனக்கொலையையும் உலகு அறியும். அதையடுத்து, ஆறு வயது நிரம்பிய பள்ளிச் சிறுமி யாழ் புத்தூரில் சிங்கள இராணுவத்தால் பாலியல் வதைக்கு உள்ளாக்கப்பட்டமை, தமிழ் மக்கள் நெஞ்சுகளைப் பிளக்கும் செய்தியாக சமீபத்தில் வெளிவந்தது.

இதன் தொடர் முடியவில்லை. மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட எல்லைப் பகுதியில் 13ஆம் குடியிருப்புப் பகுதியில் விக்கினேஸ்வரா வித்தியாசாலை பள்ளிக்கூடங்களை சுற்றி சிறிலங்கா இராணுவம் புதைத்துள்ள கண்ணிவெடிகளால் தமது உயிரையும் உடலுறுப்புகளையும் இழந்து வருகின்றனர். மிக சமீபத்தில் கூட 14 வயது பாடசாலை மாணவன் சிவபாலன் திவாகரன் தனது கால்களை இழந்த செய்தி வெளியாகியுள்ளது. அத்துடன் பெற்றோர்கள், சகோதரங்கள் சிறிலங்காப் படைகளினால் காட்டுமிராண்டித்தனமான வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றது.

மேலும், மாணவர்களின் ஊட்டச்சத்தை இயன்றளவு பேணுவதற்கான முயற்சிகளில் தமிழர் புனர் வாழ்வுக் கழகம், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் ஈடுபட்டு வருகிறது. செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை போன்றவை ஆதரவற்ற சிறுவர்களுக்கு ஆதரவாகி நிற்கின்றன. இவற்றையெல்லாம் தமிழீழ மக்கள் மிகச் சிக்கலான சூழ்நிலையிலேயே

# தமிழ்ச் சிறார்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களை சர்வதேசத்துக்கு மறைக்க கதிர்காமர் அரும்பணி

மாணவ மாணவியரை சிறிலங்காப் படைகள் தமது பாதுகாப்புப் கவசமாக்கி முகாம் அமைத்துள்ளனர். எத்தனையோ பாடசாலை மாணவர்கள் தென் தமிழீழத்திலும் வட தமிழீழத்திலும் பள்ளி செல்லும் வழியில் சிங்களப் படைகளினால் கடத்தப்பட்டும் பின்னர் கொல்லப்பட்டும் வருகின்றனர். பல இடங்களில் மாணவர்களை மக்களுக்கு முன்னிலையில் வைத்து கொடுமையான முறையில் இனக்கொலை செய்து ஏனையவர்களை அச்சமூட்டி வருகின்றனர். அத்துடன், வான்வழி குண்டுவீச்சு, எறிகணை வீச்சுக்கள் பாடசாலைகள் மீதும் பள்ளி செல்லும் பாதைகளிலும் நடாத்தப்படுகின்றன. இதனால் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் உயிரிழந்து வருகின்றனர்.

மேலும் பள்ளி மாணவர்கள், முறையில் இனக்கொலைக்கு உள்ளாவது மாணவர்களின் மனோநிலையைப் பாதிப்பதும் அல்லாமல் அவர்களுக்கு எதிர்காலத்தின் மீதே நம்பிக்கை இழக்க வைக்கிறது. இதனால், சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படையினர்க்கு எதிரான எதிர்ப்புகளில் மாணவர் சமுதாயமும் ஈடுபட்டு வருகிறது. ஆயினும், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊறு ஏற்படாதவகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கல்விக்கூடங்கள், தொழில்நுட்ப கல்வியகங்கள் நடாத்த ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார். மாணவர்களின் கல்வித் தரத்தை பேண பரீட்சைகளும் நற்சான்று இதழ்களும் கூடவே சிறந்த மாணவர்களுக்கான பரிசில்களும் தலைவர் பிரபாகரனால் நடைமுறைப்படுத்துகின்றனர்.

ஆனால், தமிழீழ மக்களின் முயற்சிகளை எல்லாம் மூடிமறைத்து, தமிழ்ச் சிறுவர்களை இராணுவ இலக்காக்கும் சிறிலங்கா அரசின் முயற்சிக்கு ஊக்கம்கூட்ட சர்வதேச பரப்புரைகளை உண்மைக்கு மாறான வகையில் பரப்பி, தமிழீழ மண்ணின் மைந்தர்கள் – தமிழீழ அரசுக்கு எதிரானவர்கள் என்பதுபோலவும், தமிழீழ அரசு அவர்களைக் கட்டுப்படுத்துவது போலவும் கதையளந்து வருகிறார் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமர்.

இந்த உண்மைக்கு மாறான சர்வதேச பரப்புரைகளை அம்பலப்படுத்தும் பொறுப்பு, புலம்பெயர் தமிழருடையதே.

◆ **பற்றிமாகரன்**

# பதினேழை விஞ்சிய மூன்று!

ஐ.தே.கட்சி பதினேழு வருடங்களில் செய்த தவறை இந்த சந்திரிகா அரசாங்கம் மூன்று வருடங்களில் செய்துள்ளது. ஐ.தே.க. தனது ஆட்சிக் காலத்தில் 47 நிறுவனங்களைப் பல்தேசியக் கம்பெனிகளுக்கு விற்றது. சந்திரிகாவின் அரசாங்கமோ ஆட்சிக்கு வந்து மூன்று வருடங்களில் 22 நிறுவனங்களைத் தாரைவார்த்துள்ளது. ஐ.தே.கட்சிக் காலத்தில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார அரசியல் நாசங்களில் இருந்து இந்த நாட்டு மக்களைக் காப்பதாக அளித்த வாக்குறுதிகள் எல்லாம் மறக்கப்பட்டு விட்டது. இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மூன்று ஆண்டுகால ஆட்சியை விமர்சனம் செய்கிறார் ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் விமல வீரவர்ம. ஜே.வி.பியின் இச்சாடலானது, அது ஓர் இடதுசாரித்தனம் பொருந்திய கட்சி என்பதினால் தட்டிக்கழித்துவிடக் கூடியது அல்ல. விமல வீரவர்மாவின், அரசுக்கு எதிரான எடுத்துக்காட்டு அரச உடமைகளை தனியார் மயமாக்கல் என்ற ரீதியில் மட்டும் இருக்கலாம். இதற்கு அவர் ஓர் இடதுசாரியாகவும் அதேசமயம் அவ்விடயத்தை மட்டுமே பேச முனைந்ததையும் கூடக் காரணமாகக் காட்டலாம். ஆனால், இக்குற்றச்சாட்டு சந்திரிகா தேர்தல் காலத்தில் அளித்திருந்த சகல வாக்குறுதிகளுக்குமே பொருத்தப்பாடானதாகும். ஆட்சிக்கு வந்ததும் எப்பாடுபட்டாலும் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்றார் சந்திரிகா. இதன்மூலம் உயிர் இழப்புக்கள் தவிர்க்கப்படுவதோடு, எஞ்சும் பெருந்தொகை நிதி அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் எனவும் அவர் வாக்குறுதி அளித்தார். ஆனால், அவர் ஜனாதிபதி பதவி ஏற்று ஐந்து மாதங்கள் கூட சமாதானத்தைப் பேண முடியவில்லை. இதே சமயம், தமது வாக்குறுதிக்கு மாறாகப் பெருந்தொகை நிதியை யுத்தத்திற்கு சந்திரிகா அரசாங்கம் செலவிடத் தயாராக நின்றது. ஒப்பீட்டு ரீதியில் கூறினால் முதலாம் கட்ட ஈழப்போர் நடந்த 5 வருடங்களில் (1983 – 1987) அன்றி இரண்டாம் கட்ட ஈழப்போர் நடைபெற்ற 5 வருடகாலம் (1990 – 1994) செலவிட்ட தொகையை விட சந்திரிகா அரசாங்கம் இரண்டரை வருடகாலப் போரில் செலவிட்ட தொகை அதிகமானது. இவை ஒருபுறம் இருக்க, ஜனாதிபதி குமாரதுங்காவுக்குப் பெரும் வாக்குகளை சேர்த்துக் கொடுத்த விடயமானது, 'ரூபா 3.50க்கு பாண் தருவோம்', 'விலை யேற்றத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம்' என்ற வாக்குறுதிகள் ஆகும். ஆனால், இன்றோ அவர் வாக்குறுதிகள் காற்றில் பறந்துவிட்ட ஒன்றாகின்றது. பாணின் விலை ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் இருந்த விலையையும் கடந்து சென்றுவிட்டதோடு, மக்கள் விலைவாசி ஏற்றத்தினை தாங்கமுடியாது திணறிக்கொண்டிருக்கின்றனர்.

அடுத்த முக்கிய வாக்குறுதியாக அமைந்திருந்தது ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படும் என்பதாகும். ஆனால், இப்பொழுது சந்திரிகா அரசாங்கம் முன்வைத்துள்ள புதிய அரசியல் யாப்பில் கூட ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு பற்றி அவ் அரசாங்கம் எதையும் குறிப்பிடவில்லை. ஆனால், கடந்த முறை தனக்குப் பாராளுமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெறுவதற்குத் தடையாக இருந்த தேர்தல் முறையை மாற்றுவது குறித்தே சிறிலங்கா அரசாங்கத்தரப்பில் முனைப்புடன் பேசப்படுவதாக உள்ளது. இதேவேளை, தற்போது தமக்கு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவு செய்வதற்கு யுத்தத்தில் வெற்றியும் புதிய அரசியல் யாப்புமே தீர்வு என்ற ரீதியில் சிறிலங்கா அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது. ஆனால், அதே அரசாங்கம் யுத்தத்தில் வெற்றி பெறப்போவதாகவோ அன்றி புதிய அரசியல் யாப்பினை உருவாக்கி வெற்றி பெறுவதற்கான சூழ்நிலையோ, களநில வரமோ இருப்பதாக இல்லை. இந்த ரீதியில் சந்திரிகா குமாரதுங்கா இனப்பிரச்சனைக்கு சமாதான ரீதியில் ஒரு தீர்வு காணப்படும் எனத் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கு விலைவாசி ஏற்றத்தைத் தடுத்தல், பொருளாதார அபிவிருத்தியைக் கட்டி எழுப்புதல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்தல் என்ற ரீதியில் வழங்கிய வாக்குறுதி எதையும் நிறைவேற்றவில்லை. ஆனால், சந்திரிகா அரசாங்கமோ யுத்தத்தின் முடிவும் புதிய அரசியல் யாப்பும் இவற்றைத் தீர்த்து வைப்பதற்கான மார்க்கமாக இருக்கும் என்றது. ஆனால், இது ஓர் முடிவில்லாத பாதையின் எல்லைகள் குறித்துப் பேசுவதாகவே உள்ளது. ✷

**ஆட்சிக்கு வந்ததும் எப்பாடுபட்டாலும் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்றார் சந்திரிகா. இதன்மூலம் உயிர் இழப்புக்கள் தவிர்க்கப்படுவதோடு, எஞ்சும் பெருந்தொகை நிதி அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் எனவும் அவர் வாக்குறுதி அளித்தார். ஆனால், அவர் ஜனாதிபதி பதவி ஏற்று ஐந்து மாதங்கள் கூட சமாதானத்தைப் பேண முடியவில்லை.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர்கள்-விடுதலைக்கு உயிர்தந்த உத்தமர்கள்



**லெப். சங்கர்**
**பிறப்பு: 19-06-61 வீரச்சாவு : 27-11-82**

**தழைக்க ஓங்கித் தமிழ்ப் பொழில்
முளைக்க நீயே முதல்விதை ஆனாய்!**

எமது தேசம் விடுதலைபெற வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, தன்னாட்சி உரிமைபெற்று தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற உயரிய இலட்சியத்திற்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்முயிர்ப் போராளிகளை, நாம் எமது இதயக்கோவிலில் பூசிக்கும் புனித நாள் இன்று.

உலக வரலாற்றில் எங்குமே, எப்பொழுதுமே நிகழ்ந்திராத அற்புதமான தியாகங்கள் இந்த மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன. மனித ஈகத்தின் உச்சங்களை எமது போராட்ட வரலாறு தொட்டு நிற்கிறது. இந்த மகோன்னதமான தியாக வரலாற்றைப் படைத்தவர்கள் எமது மாவீரர்கள்.

எமது விடுதலைக் காப்பியத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு பந்தியிலும் எமது மாவீரர்களின் தியாக வரலாறு நெருப்பு வரிகளால் எழுதப்பட்டிருக்கிறது.

– தமிழீழத் தேசியத் தலைவர்
(தலைவரின் மாவீரர் நாள் செய்தியிலிருந்து)




**2 ம் லெப். மாலதி**
**பிறப்பு : 04-01-67 வீரச்சாவு : 10-10-87**

**தேசத்தின் புதல்வியவள்
தேடினாள் விடியலையே.
தேசமே பெரிதென்றெண்ணி
தானைத் தலைவன் அணி நின்றாள்.
புது நானூறு படைத்தளிக்க
புலிப் பெண்ணாய் முன் எழுந்தாள்.**

உலக விடுதலை வரலாறுகளில் உன்னதமானது நம் தமிழீழத் தேச விடுதலை வரலாறு. உலகே காணாத அளவுக்கு – பிரமிப்பு அடையும் அளவுக்கு தியாகங்களால் அர்ப்பணிப்புக்களால் நிறைந்து அசைக்கமுடியாத உறுதி கொண்டது நம் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம். "தத்துவங்கள், உண்மைகள் வன்முறைக்கு உள்ளாக்கப்படும் பொழுது தேசிய உணர்வலை எழும்பும். அதனை செம்மைப்படுத்தும் செயற்பாடாக தேசிய இயக்கங்கள் பிறக்கும்" என்ற எர்னஸ்ட் கில்னரின் தேசிய வாதங்கள் குறித்த ஆய்வுக்கு உதாரணமாகத் திகழ்வது நம் தமிழீழத் தேச வரலாறு. ஒரு மக்கள் இனம் தம் தேசத்திற்காக தங்கள் உயிர்களையே கொடுக்கத் தயாராகும்பொழுது அதற்கு தேச இனமெனும் தகுதி தானாகவே வந்துவிடும் எனும் தோமஸ் கைலாண்ட் எரிக்சனின் கூற்றுப்படி, தமிழீழ மக்கள் தமது தியாகங்களினால் தாம் தமிழீழ தேச மக்கள் என்ற தகுதியை உலகுக்கு நிரூபித்து நிற்கின்றனர். "எங்களுக்கு வித்தே வேண்டாம். நாங்கள் வேரிலிருந்து முளைவிடும் சக்தி. எங்களைக் கூட்டிக்குவித்து தீயிலிடு. மறுநாள் சாம்பரிலிருந்து பிறப்போம். வெட்டிச் சரித்து புதைத்திடு. மூன்றாம் நாள் எங்கள் முகம் தெரியும் – இதுதான் தமிழ் இனம்" எனப் வீரப்பாட்டிசைத்து நிற்கும் உணர்ச்சிச் சமுதாயம் எம் தமிழீழச் சமுதாயம். இந்த வீர உரைக்கு, கவிதை வரிகளுக்கு சரித்திரச் சாட்சிகளாக விளங்குபவர்கள் நமது மாவீரர்கள். சந்ததி காக்க நடக்கும் சமரில் சந்ததிக்காக தம் உயிர் தந்து, மண்ணுக்காய் மண்ணை முத்தமிட்டு சாவையும் சரித்திரமாக்கியவர்கள். எங்கள் வாழ்வின் விளக்கொளிர மெழுகாய் உருகியவர்கள். இவர்களின் கல்லறைகளும் கருத்தரிக்கும்.

மாவீரர்கள் காலால் நடந்து, வாயால் மொழிந்து, கையால் தலைவாரிக் கொண்டு எம்மைப் போல் ஒருவராய் வாழ்ந்த தமிழீழக் குடிமக்கள். ஆனால், அவர்கள் நெஞ்சிலே எரிந்த விடுதலைக் கனல் மட்டும் அவர்களை மானிடத் தெய்வங்களாக உயர்த்தியது. இந்த விடுதலைக்கனல், அவர்களை உயிர்ப் பூவைக் கிள்ளி எடுத்து விடுதலைக்கு விலைகொடுக்கும் வித்தியாசமான தெய்வப் பிறவிகளாக மாற்றியது. அவர்கள் தேவை அறிந்து போராடியவர்களே அன்றி, சாவை விரும்பிச் சந்தித்தவர்கள் அல்ல. இவர்கள் வசந்தம் தழுவாத கொடிகளோ – முகில்கள் முட்டாத முகடுகளோ அல்ல. இதயத்தால் இரும்பானவர்களும் அல்ல. பனியாய் உருகும் நெஞ்சுக்குள் பாகாய் இனிக்கும் வார்த்தைகளுக்கும் இவர்களே உரிமையாளர். தடைகள் கோடியென்றாலும் படைகள் தேடி வந்தாலும் விடைகள் எங்கள் தோள்களில் உண்டு எனக் களம்புகுந்த வேங்கைகள் இவர்கள். வீரர்கள் என்றும் சாவதில்லை –



சாவுக்குப் பயந்தவர் வீரரில்லை என உணர்ந்த இவர்கள், தோல்வியைக் கண்டு துவள்வதில்லை. சலுகைகளுக்குத் தட்டேந்திய எமது தேச வரலாற்றை, உரிமை தேடும் திசையில் திருப்பிய காலத்தின் கல்அணையான தேசத் தலைவன் பிரபாகரன் – தென்றலின் சிறு கால்களில் கூட புயலின் வேகத்தைப் பூட்டிய பிதாமகன் – என்பதை உலகுக்கு நிரூபித்த சாதனையாளர்கள். தலைவர் பிரபாகரனின் கண்ணில் எழும் பொறிகள் ஆணையிடும் போதினிலே, தேசக் கடமைக்காய் தேகத்தை விடுத்து தேசிய ஆன்மாவாய் எழுந்தவர்களே நம் மாவீரர்கள். அழுவதும் தொழுவதும், அடுத்தவர் எமது உரிமையைப் பெற்றுத் தந்திடமாட்டாரா என ஏங்குவதுமாய் சலுகைகள் பெற்றும் சரணாகதி அடைந்தும் செத்துப் பிழைத்தும் மானிடராய் வாழ்ந்த மக்கள் வரலாறு மாவீரர்களின் எழுச்சியால் மாற்றப்பட்டது.

**மாவீரர்களே!**
**நெஞ்சில் விடுதலைக் கனலைச் சுமந்தீர்**
**நெருப்பினில் ஆடியும் தேகம் இழந்தீர்**
**உங்களின் நினைவுடன் பயணம் தொடரும்**
**ஒருநாள் வெற்றிக் கொடிகள் உயரும்**



இதனால், எம் தேச வரலாற்றில் ஒரு புதுஅத்தியாயமாக எங்கள் மாவீரர் நாள் எழுச்சி பெற்றது. மரணமில்லாத மனித குலம் ஒன்று இந்த மண்ணில் வாழ வேண்டும் என்ற கவிஞனின் கனவு என்ற காலத்தை மாற்றி, தமிழீழத் தேச சரித்திரத்தின் நனவுக் காட்சியாய் விளங்குகிறது மாவீரர் நாள். சதையைக் கிழித்து, சத்தியத்தை இலட்சியத்தை சிதைத்துவிடலாம் என்ற சின்னப் புத்தி சிங்களப் பேரினவாதிகளுக்கு சிதையிலிருந்தும் போராட்டத்துக்கான உயிர்ச் சக்தி ஊற்றெடுத்துப் பாயும் எனக்காட்டிய சாதனையாளர்கள் நம் மாவீரர்கள். தன்நலம் பேணும் சுயநல நெஞ்சங்கள் நிறைந்த இன்றைய உலகில் நிதம் உங்களதும் எங்களதும் நல்வாழ்வு நினைந்து சந்ததி வாழத் தம்முயிர் தந்த தன்னலம் பேணாப் பெருந்தகையாளர்களே மாவீரர்கள். அவர்களது ஆன்மா தேசத்தின் விடுதலைக்காய் விடுபட்ட காரணத்தால் – அவர்களின் சாவு எங்களின் வாழ்வாகியதன் காரணத்தால் – மாவீரர் நாள் தமிழீழத் தேசத்தின் தேசிய தினமாகி தமிழீழ மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் வாழ்வின் புனித நாளாக விளங்கிறது.

இது தமிழீழ மக்களின் உறுதியின் வெளிப்பாட்டுத் தினம். எம் மாவீரர்களில், களமாடித் தாயக மீட்புக்காய் களத்திலே வித்தாகிய உத்தமர்கள் – தம் சாவுக்குத் தேதி குறித்து அந்தச் சாவையும் தமிழீழ விடுதலையின் வெற்றிச் சரித்திரமாய் மாற்றிவிடும் கரும்புலித் தியாகிகள். இவ் மாவீர மனிதர்கள் விளைகின்ற தமிழீழத் தேசம் வீரத் திருநாடாய் விளங்குகின்றது. கரி, பரி, தேர், காலாட்படை கொண்டு யாழ் – வன்னி அரசர்கள் ஆண்டமை நேற்றைய வரலாறு. ஆனால், உயிராயுதம் எனும் புதுப்படை கொண்டு சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக தன்

www.tamilarangam.net

# மாவீரர் நாள்- தமிழீழத் தேசியத் திருநாள்

இலங்கைத் தீவின் ஒரு பகுதியாக இருந்த எமது மண் இன்று, உலகத்தின் கண்களில் தமிழீழமாகத் தோன்றத் தொடங்கியிருக்கின்றது. இந்த மாற்றம், வெறும் ஒலிபெருக்கி முழக்கங்களினாலும், அச்சடித்த காகிதங்களாலும், வாய்ச்சவால்களாலும் கொண்டுவரப்பட்டதல்ல. ஒற்றைத் துப்பாக்கியோடு, உறுதியும், கட்டுப்பாட்டுடனும் ஆரம்பித்த எமது இயக்கத்தின் எண்ணற்ற வீரர்கள் செய்த தியாகங்களினாலும், சிந்திய இரத்தத்தாலும், கண்ட சாதனைகளாலும் உருவானது தான் தமிழீழம். இதற்கு நாம் கொடுத்த விலை சொல்லில் அடங்காது. வீட்டைப்பிரிந்து, படிப்பைத்துறந்து.... கைகளில் துவக்கோடும், கழுத்தில் சனனைட்டோடும், களத்தில் இளம்புலிகள் எத்தனை பேர்! அவர்களது வேட்கையும், வீரமும், விவேகமும் தான் விடுதலைப்போரின் உயிர்மூச்சு. இவர்களது வெற்றிகளின் பின்னால் வேதனைகள், எத்தனையோ வீரமரணங்கள். மண்ணில் கலந்த குருதி நாளைய அரசியல் சாசனமாக உருமாறும். இவர்கள் களம் கண்ட கதையை தலைமுறைகளிற்கூடாக காலம் எப்போதும் சொல்லிக்கொண்டிருக்கும்.

தாயகத்தை மீள மீட்கப் போராடுவது இன்றைய வரலாறு. "காலம் எமக்கொரு கட்டளையிட்டது களத்தினில் வாவென்று – நஞ்சு மாலை தரித்தொரு தேதி குறித்தனர் – மானம் பெரிதென்று" என தமிழீழ மக்கள் மேல் சிறிலங்கா ஆக்கிரமிப்பாளன் போரைத் திணிப் பதையும் அதை உயிரைக் கொடுத் தேனும் முறியடித்து தேசத்தை மீட்க மக்கள் பூண்டுள்ள உறுதி நிலையையும் உலகு அறியும். இந்த உறுதிக்கு உயிரால் பலமூட்டி வடக்கும் கிழக்கும் சிறிலங்காவின் எச்சங்கள் என்ற காலத்தை மலையேற்றி, புவி மீதில் அவை வரலாற்றுக்கு முன்பிருந்தே தமிழீழ மக்கள் தாயகம் என்ற உண்மையை எடுத்து விளக்கிட தம் தேகத்தையே சிதைத்த உத்தமர்கள் நம் மாவீரத் தெய்வங்கள் – எமது தேசத்தின் வீர புருசர்கள்.

உலக நாடுகளின் வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் ஒவ்வொரு நாடும் தனது



தேசத்து உயிர்த் தியாகிகளை தேச புருசர்களாகப் போற்றி தேசிய தினம் கொண்டாடுகின்றது. பிரித்தானியாவில் கார்த்திகை பிறந்தால் அம் மக்கள் 'பொப்பி' எனும் பூ அணிந்து தமது வாழ்வுக்காகப் போரில் உயிர்நீத்த தமது போர்வீரர்களை நினைவுகூர்வதைக் காணலாம். அதுபோல பிரான்சில் பிரெஞ்சுப் புரட்சியின் நினைவு ஆடி 14ஆம் நாள் தேசிய தினமாக மக்கள் பெருவிழாவாக சிறப்பிக்கப்படுகிறது. உலகின் எந்தத் தேசத்தை எடுத்து நோக்கினாலும் போர் நினைவுச் சின்னங்கள், மாவீரர் துயிலகங்கள் தேசச் சொத்தாக பேணிப் பாதுகாக்கப்பட்டு பூசிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வகையில், தமிழர் வரலாற்றிலும் சங்க காலம் முதலே "விழுந்தொடை – மறவர் வில்லிட வீழ்ந்தோர் எழுத்துடை நடுகல்" என மாவீரர்களுக்கு நடுகல் நாட்டி போற்றப்பட்டமையை தமிழிலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. எமது தமிழீழத் தேச வரலாற்றிலும் யாழ்ப்பாண அரசினதும் வன்னிமைகளதும் மாவீரர் களின் நடுகற்கள் திருவுருவச் சிலைகள் போற்றப்பட்டமையை சரித்திர சான்றுகள் எடுத்துரைக்கின்றன. இவற்றில் பண்டார வன்னியன், சங்கிலி மன்னன் இவர்களினது திருவுருவச் சிலைகள் இன்றும் (சிதைவுபட்டாலும்) இருப் பதைக் காணலாம்.

ஆனால், தமிழீழ மாவீரர்கள் நாள் வெறுமனே கடந்தகாலத் தியாகிகளை நினைவுகூரும் ஒரு தினமல்ல. மாறாக, நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் அவசியமான பல்லாயிரக்கணக்கான போர்த் தியாகிகள் உருவாவதற்கு அவசியமான சமூக சூழலை உருவாக்கும் துரிதப்படுத்தும் ஒரு தினமுமாகும். இத்தினத்தில், வாயளவு வணக்கம் செய்து செயலளவில் தேசம் மீட்க எதுவும் செய்யாது, நாளை செய்வோம் எனப் பிற்போட்டால் அவர்கள் செய்வார்களென ஒதுங்கிவிட்டால் மாவீரர் ஆன்மாக்கள் எம்மை ஒருபோதும் மன்னிக்காது. தேசக் கடமை செய்ய எழுகவென மாவீரர் அணையா தீபங்கள் காற்றில் அசைந்து எமை அழைக் கின்றன. இது வெறுமனே அரசியல் அழைப்பு அல்ல – சதையால் இரத்தத்தால் உயிரால் கையொப்பமிட்ட புனித அழைப்பு. இந்த அழைப்புக்கு தலைவணங்குவதன் மூலம் மட்டுமே, எமது மானிடத் தெய்வங்களாம் மாவீரருக்கு உண்மையான வீரவணக்கம் செய்ய முடியும்.

"தன்நாட்டை தான் பெறான்
உலகில் எந்நாட்டான் ஆயினும் இழிந்தான்"

என்பது புரட்சிக் கவி பாரதிதாசனின் கவிதைவரி. எனவே நாம் தமிழீழத்துக்கு வெளியே புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் நம் நாட்டைப் பெறாவிடில் நம்மை இழிந்தவர் என்றுதான் இவ்வுலகு பழிக்கும்.

"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும்
மக்கள் இனமீன்ற தமிழ்நாடு தனக்கும்
என்னால்
தினையளவு நலமேனும்
கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனக்குத
திருநாளாகும்"

என்ற பாரதிதாசனின் கனவினை நனவாக்கிய பெருமை தமிழீழ மக்களுக்கே உண்டு.

"உள்ள உயிர் ஒன்றுதான்
அது போகப் போவதும் ஒருமுறைதான்
தாய்நாட்டு விடுதலைக்குப் போவதிலே
ஒரு தனிச்சிறப்பு இருக்கிறது"

என்ற பேரறிஞர் அண்ணாவின் வார்த்தைகளுக்கு அர்த்தம் கொடுத்த வர்களும் தமிழீழ மக்கள்தான். "பூக்களும் நாமே புலிகளும் நாமே" என நட்புக்கு மென்மனதும், பகைக்கு புலி வலிமை எதிர்ப்புளமும் காட்டுபவர்கள் தமிழீழ மக்கள். ஆதலால், விடுதலைக்காக உயிரையே விலைகொடுத்து நிற்பவர்களிடம், சலுகை களை கிள்ளி எறிந்து, ஈகைச் சுடரேற்றும் எங்கள் மண்ணை இனிமேலும் ஏமாற்றலாமென்று நினையாதீர். "மானத்தோடு தமிழன் வாழ்ந்தான்" என்ற ஒரு வரலாறே வேண்டும் – "வீரத்தோடு போராடி வீழ்ந்தான்" என்ற சரித்திரம் இனி ஒருபொழுதும் இடம்பெறாத வகையில் அனைத்துச் செயற்பாடுகளும் இருக்க வேண்டும்.

ஆகவே, படைவிலக்கி வாருங்கள் – பகை முடிக்க வழி உண்டு – சர்வதேச மத்தியத்துடன் பேசித் தீர்க்கவும் இடமுண்டு. இல்லையேல் மாவீரர் வித்துடல் சுமக்கும் குறுமண்ணும் சிங்களப் படையினரை விழுங்கி தன்னைத்தானே விடுவிப்பதை வரலாறு உலகுக்கு உணர்த்தும்.

இதுவே மாவீரர் நாள் கூறும் செய்தி! ✳

## விடிவெள்ளிகள்

இளவயது கனவுகளை
இதயத்தில் புதைத்து
மண்மீட்புப் போரில்
மரணித்துப் போனவர்களே!
மரணம் கூட உங்களால்
மகத்துவம் பெற்றது.


காலத்தின் தேவைக்காய்
களம் பல சென்று
விடிவுக்காய் வீழ்ந்த
வீரத்தின் விழுதுகளே!
விடுதலை வரலாற்றின்
விடிவெள்ளிகள் நீங்களே.

## மாவீரர்களே !

உங்களைப் புதைத்த மண் உறங்காது
உரிமைகள் பெறும் வரை கலங்காது
எங்களின் தாயகம் விடிவுபெறும் – புலி
ஏற்றிய கொடியுடன் ஆட்சி வரும்.

## மாவீரர் நாள்

கருமேகம் கூடக் கசிந்து, விழிசிந்தும்
நள்ளிரவுப் போதில் நாதமணிச் சத்தம்.
கல்லறைக்கு முன்பாக நெய்விளக்குப் பந்தம்
நெஞ்சத்துணர்வினிலே...... நெக்குருகி,
கண்களிலே எங்கும் நீர்க்கோலம்.
"மாவீரர்நாள்"
எம் மண்
திரும்பத் திரும்பத் தீக்குளிக்கும் தினம்.
"பீடரியில், தட்டி விரட்டி அடிக்கலாம்
தராசுத் தட்டில் நிறுத்தும் வாங்கலாம்"
இப்படி மாற்றான் எண்ணிய தமிழனை
புலியென நினைத்து கிலிகொளவைத்த
"பிள்ளைகள்" நினைவில் உருகிடும் நாளிது.
கல்லறை தழுவும் காற்றே வருக!
காவியநாயகர் மூச்சைத் தருக!



www.tamilarangam.net



### அமெரிக்காவின் செயலால் .....

ஒருங்கிணைப்பு குழுவால் பரவலானமுறையில் தமிழகம் தழுவி நடாத்தப்பட்ட போராட்டங்களுக்கு, மக்கள் என்று மில்லாத எண்ணிக்கையில் ஆதரவு கொடுத்து பங்கேற்றனர். இதனால் கைது செய்யப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை 2000க்கும் அதிகம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. திரு. பழ. நெடுமாறன், திரு. மணியரசன், திரு. தியாகு உட்பட பல தலைவர்களும் கைதாகியுள்ளனர்.

## நோர்வேயில் மாவீரர் நாள்

**Stavanger:**
Lura Bydelshus,
Prinsens Vei - 14A
4300 Sandncs

**Floroo:**
Floroo Samfunnhuset
6900 Floroo
22.11.97 சனிக்கிழமை
✻ மாலை 6.00 மணி

**Oslo :** Samfunnshuset
Oslo
29.11.97 சனிக்கிழமை
✻ மாலை 6.00 மணி

**Hammerfest :**
Hammerfest Kino
9600 Hammerfest
✻ 22.11.97 சனிக்கிழமை, மாலை 5.30 மணி

**Trondheim :**
Katedral Skole
7001 Trondheim
✻ 22.11.97 சனிக்கிழமை, மாலை 6.30 மணி

**Bergen :** Ortun Skole
5028 Bergen
✻ 23.11.97 சனிக்கிழமை மாலை 5.00 மணி

**Vardoo :** Vardoo Kino Senter
9950 Vardoo
✻ 22.11.97 சனிக்கிழமை மாலை 7.00 மணி

## விடுதலை வேண்டிநிற்கும்......

தேவையை உணர்த்தும் நாள். தம்முள் இருக்கும் மனித ஆளுமையை, ஆற்றல்களை, உரிமைகளைப் புரிந்து கொள்ளுமாறு ஒவ்வொரு பெண்ணும் சகமனிதர்களிடம் வலியுறுத்தும் நாள். தம்மை நசுக்கிவரும் சமூக அடக்குமுறையிலிருந்தும், இன மேலாதிக்கத்திலிருந்தும் விடுதலையையும், அமைதியையும் வேண்டி நிற்கும் பெண்ணினத்தின் உணர்வுகளோடு இந்நாளில் நாம் ஒன்றுபடுவோம்." இவ்வாறு தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

"பத்து ஆண்டுகளின் முன் ஒக்டோபர் 10ஆம் நாளில் 2ஆம் லெப். மாலதி எமது இயக்கத்தின் முதல் பெண் புலியாக களத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். எமது தேசிய விடுதலைப் போருக்கு உத்வேகம் கொடுத்த நிகழ்வுகளில் ஒன்றாக இந்த நிகழ்வு அன்று அமைந்தது.

ஒரு இனத்தின் இயல்பான வாழ்நிலை அச்சுறுத்தப்படும்போது, அந்த இனம் வீறு கொண்டெழும். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, தன் நிம்மதியைக் குலைக்கும் சக்தியை எதிர்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். இது ஒரு நடைமுறை உண்மை. தமிழரின் தாயகப் பகுதியிலேயே, தமிழரின் பாதுகாப்பு சிங்களப் பேரினவாதிகளால் கேள்விக்குள்ளாக்கப்பட்டபோது, அதை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடத் தமிழினம் நிர்ப்பந்திக்கப்பட்டது. தன் இருப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எழுச்சி கொண்டு அணி திரண்டது. இந்த எழுச்சி தமிழீழ மக்கள் அனைவருக்குமே பொதுவானது. பாலின வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. இந்த எழுச்சியினால் உந்தப்பட்டு அணி திரண்ட பெண்களுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் களம் அமைத்துக் கொடுத்தது. இதனால், தேசிய விடுதலையில் அவாக் கொண்ட பெண்கள், புலிகளின் தலைமையில் ஒரு பெரும் சக்தியாக அணி திரண்டனர். இன்று தமிழீழ விடுதலைப் போரில் இவர்கள் ஆற்றிவரும் பங்கு மிகப் பெரியது.

எமது தாயகத்தை ஆக்கிரமிக்கப் போவதாக இறுமாந்துள்ள எதிரிக்கு எதிராக இவர்கள் களத்தில் போரிடுவதுடன், சமூகத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள பெண்ணொடுக்கு முறையைக் களைவதற்கான பணியையும் வழிநடத்துகின்றனர்.

பெண்ணொடுக்குமுறை உலகில் நெடுங்காலமாக நிலவிவரும் பிரச்சினையாகும். பாலின வேறுபாடற்று அனைத்து மக்களையுமே பாதிக்கும் சமூகப் பிரச்சினையாக இது விளங்குகின்றது. ஆழமாக நோக்கினால், சமுதாய மேம்பாட்டைத் பின்தள்ளும் காரணியாகவும் கூட இது அமைகிறது. இந்தப் பிரச்சினையைத் தனியொருவராலோ, தனியொரு பாலாராலோ தீர்க்கவியலாது. ஒட்டுமொத்தமாக முழுச்சமூகமுமே இதில் அக்கறை கொள்ளும் போதுதான் பெண்ணொடுக்குமுறையை இல்லாதொழிக்கும் முயற்சியில் வெற்றி காண்பது சாத்தியமாகும்.

இன்று தமிழீழப் பெண்ணினம் பெரும் சுமைகளைச் சுமக்கிறது. இனவாத எதிரியின் ஆக்கிரமிப்புப் போரால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் உண்டான மன உளைச்சல், வீதியோரங்களில் மரங்களின் கீழும், சிறு மறைப்புகளுக்கு நடுவிலும் வாழும் வாழ்வில் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகளால் எழும் மனக்குமுறல். ஒழுங்காகச் சாப்பிடவும் வழிவகையின்றி கல்வியையும் தொடர முடியாமல் அலைகின்ற குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய பயம். போதிய மருத்துவ உதவிகளின்றி உறவுகள் சாவதால் உண்டாகும் அவலம். பெண் என்ற காரணத்துக்காக இரண்டாம் தரக்குடிமக்களாக நோக்கப்படுகின்ற இழிநிலை என்று எல்லாமாகச் சேர்ந்து அவர்களை நிமிரவிடாமல் அழுத்த முனைகின்றன. இத்தனை சுமைகளிலிருந்தும் அவர்கள் விடுபடத் துடிக்கின்றனர். துன்பங்களுள் அமிழ்ந்து போகாமல் நிமிர்ந்து வாழ விரும்புகிறார்கள். எல்லாப் பணிகளிலும் தமக்குத் தோள் தருமாறு சக மனிதர்களை வேண்டுகிறார்கள்.

எமது சமூகத்திலுள்ள ஒவ்வொருவருக்குமே பெண்ணொடுக்குமுறையை இல்லாதொழிக்கும் பெரும் பொறுப்பு இருக்கின்றது. இந்தப் பொறுப்பை அக்கறையுடன் ஏற்க எல்லோருமே முன்வர வேண்டும்.

நம் சமூகத்தின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் காரணிகளில் ஒன்றான பெண்ணொடுக்குமுறை பற்றி விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில்தான் அவர்களால் எந்தக் கருத்தையுமே உள்வாங்க முடியும். எனவே, அத்தகைய நிலையைத் தோற்றுவிப்பதில் சமூக அக்கறை கொண்ட ஒவ்வொருவருமே ஒன்றிணைய வேண்டும்.

பெண்களின் முன்னேற்றத்தில் பொருளாதாரமும் முக்கிய பங்கு வகிப்பதால், அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றி, அவற்றை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் பற்றி ஆய்வுகளில் ஈடுபட வேண்டும்.

பெண்களின் வளர்ச்சி நோக்கிய எத்தகைய நடவடிக்கையை முன்னெடுப்பதற்கும், எதிரி எம்மீது கட்டவிழ்த்துவிட்டுள்ள இனவாதப் போர் தடைபோட முயலுவதால், இப்போரை வெல்வதற்கான பணியிலும் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

இந்த வேலைகளின் அவசியத்தை உணர்ந்து, இருபாலாருமே புரிந்துணர்வுடன் இணைந்து பெண்ணொடுக்குமுறைப் பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும். இதையே இந்நாளில் தமிழீழ மக்களிடம் நாம் வேண்டிக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ✻

### எம்-ஐ-24 உலங்கு வானூர்தி ....

11ஆம் திகதி காலை 11 மணிக்கு தமிழீழ வானில் முல்லைக் கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளது.

இந்த வான்படை அணியில் 40 துருப்புகளுடன் பறந்து கொண்டிருந்த மற்றொரு எம்.ஐ-17 ரக துருப்புக்காவி உலங்குவானூர்தியும், காற்றாடிப் பகுதியும் வால்பகுதியும் சேதமடைந்த நிலையில் தரையிறக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா இந்த எம்.ஐ-17 ரக உலங்குவானூர்தி தரையிறக்கப்பட்டபோதும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லையென ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அதேவேளை, வானில் வெடித்துச் சிதறிய எம்.ஐ-24 ரக உலங்கு வானூர்தியில் சிறிலங்காவின் விமான படையைச் சேர்ந்தோர் ஐந்து பேருக்கு மேல் இருந்துள்ளனர்.

வெப்பத்தை தேடித் தாக்கும் ஏவுகணைகள் இரண்டை விடுதலைப் புலிகள் படகில் இருந்து ஏவியதைப் பார்த்ததாக மற்றைய உலங்கு வானூர்தியில் சென்ற படையினர் தெரிவித்ததாகச் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இவ் உலங்குவானூர்தி திருகோணமலையில் இருந்து துருப்பினரை வடக்கே கொண்டு சென்றதாக விமானப் படை அதிகாரிகளும் வவுனியாவில் இருந்து படையினரை ஆனையிறவுக்குக் கொண்டு சென்றதாக பாதுகாப்பமைச்சும் முன்னுக்குப் பின் முரணான தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த உலங்கு வானூர்தி அணி சிதறடிக்கப்பட்டதை அடுத்து சிறிலங்கா விமானப்படையினர் இடையில் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு படைத் தாக்குதல்கள் குறித்து மேலும் கடும் அச்சங்கள் எழுந்துள்ளதாகக் கொழும்புப் பத்திரிகை வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன. ✻

### ஜெயசிக்குறு முன்னரங்க .......

வைத்தியசாலைக்குக் கொண்டு போக முடியாது சிங்களப் படை திணறுகிறது.

இதற்கிடையில், போர் நடவடிக்கை குறித்து பத்திரிகையாளர்கள், செய்தி நிறுவனங்களைச் சாடியுள்ள பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்த படைத்துறை ஆய்வாளர்கள், செய்தியாளர்கள், அவதானிகளின் கருத்துக்களைப் புறக்கணித்துவிட்டு பெரும் எடுப்பிலான அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள பெரு முனைப்புகளைத் தொடர்கிறார். இதற்காக ஏராளமான ஆயுத தளபாடங்களும் வவுனியாவுக்குத் தருவித்துள்ளார். விடுதலைப் புலிகளிடம் சிக்கித் தடுமாறும் ஜெயசிக்குறு படையணியை மீட்டு தமது இலக்கை அடைவதென்னும் சந்திரிகா அரசின் நோக்கைப் பூர்த்தி செய்ய முயல்கிறார். இது தோல்வியுறும் பட்சத்தில் சந்திரிகா அரசு மோசமான அரசியல் சிக்கலை எதிர்நோக்குமென சந்திரிகாவும் ரத்வத்தவும் கருதுகின்றனர். ஆழம் தெரியாமல் காலை விட்டதன் பலனை அனுபவிக்கும் ரத்வத்த பெருமளவிலான ஆளணி இடப்பெயர்ச்சியைச் செய்து நோக்கை எய்த திட்டம் தீட்டி வருகிறார்.

இதேவேளை, கடந்த 8ஆம் திகதி வவுனியா – மன்னார் வீதியில் பத்துக்கு மேற்பட்ட காவலரண்கள் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டு பத்துக்கு மேற்பட்ட பொலிசார் கொல்லப்பட ஏனையோர் தப்பி ஓடியுள்ளனர். வவுனியா – மன்னார் வீதியில் உள்ள பறையனாலங்குளப் பகுதிக் காவலரண்களே தாக்கப்பட்டன.

மேலும் தென் தமிழீழம் மற்றும் யாழ் குடாநாடு எங்கும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் வலுவடையும் இத் தருணத்தில், ஜெயசிக்குறு நடவடிக்கைக்கான ஆளணி பெயர்ச்சிகளைச் செய்வதில் சிறிலங்கா தயக்கம் காட்டி வருகிறது.

எது எப்படியிருப்பினும், சந்திரிகா அரசு தனது பாதை திறப்பு முயற்சியை பின் புறங்களூடாவது நகர்த்தி வெற்றிபெறலாமென்று பகற்கனவு கண்டு பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறது. ✻

## நியூசிலாந்தில் மாவீரர் நாள்

**Auckland :**
War Memorial Hall, May Road
Mt Roskill, Auckland
Date : **22 .11.97** Time : **6.30 pm.**

**Wellington :**
Petone College
27 North St, Petone, Wellington
Date : **29.11.97** Time : **6.30 pm.**

# சிறுகதை




அருணாசலத்தாருக்குத் தான் கட்டிய குடிசையையும், சிறு காய்கறித் தோட்டத்தையும் பார்க்க துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. கண்களில் நீர் திரண்டு வழிந்தது. நேற்றுப் பெய்த மழையினால் பழைய கிடுகால் மேய்ந்த கூரை ஒழுகி மண்தரை தெப்பமாக நனைந்திருந்தது. வளர்ந்துவரும் வெண்டி, கத்தரி, மிளகாய்ச் செடிகள் நோயினால் பீடிக்கப்பட்டு சோர்ந்து போயிருந்தன. தனது முயற்சிக்குப் பலன் கிடைக்காமல் போகப் போகிறதே என்ற ஏக்கம் மனதில் குடிகொண்டது.

நேற்றுப்பகல் முழுவதும் கடன் கேட்டு, கொட்டும் மழையில் நனைந்தபடி அலைந்து திரிந்து உடற்களைப்பும், உளச்சோர்வும் தான் அருணாசலத்தாருக்கு மிச்சம். இந்தக் காலத்தில் யார்தான் கடன் கொடுக்கப் போகிறார்கள்.? அருணாசலத்தாரின் மனதில் இருந்த கொஞ்ச நம்பிக்கையும் கலைந்தது.

அருணாசலத்தார் இந்தக் குடிசையையும், தோட்டத்தையும் உருவாக்கப்பட்ட கஸ்ரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அருணாசலத்தாரின் சொந்த இடம் அச்சுவேலி. பல ஏக்கர் வயல், கல்வீடு, முந்திரிகைத் தோட்டம் எனச் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தவர் அருணாசலத்தார். அன்னியன் ஆக்கிரமிப்பால் ஊரே உடுத்த உடுப்புடன் இடம்பெயர்ந்தது. அருணாசலத்தாரின் குடும்பமும் கோப்பாய்க்கு இடம்பெயர்ந்தது. பின்னர் வடமராட்சிக்கு இடம்பெயர்ந்தது. பின்னர் அங்கிருந்து பல கஸ்ரங்களுக்கு மத்தியில் வன்னிக்கு வந்து சேர்ந்தது.

எங்கு குடியிருப்பது? எப்படி சீவிப்பது? என்று அருணாசலத்தாருக்கும் தெரியவில்லை. உழைத்துத் தரும் வயதில் இருந்த மகன் கண்ணனும் இயக்கத்துக்குப் போய் சில வருடங்களாகிவிட்டன. காட்டைத் திருத்தி குடியிருக்க வேண்டிய நிலை. அருணாசலத்தாருக்கு ஆரம்பத்தில் இந்தச் செயலில் ஈடுபட அச்சமாக இருந்தது. வாழ்க்கையில் எதிர்நீச்சல் அடிக்க அவர் மனம் துணிந்து கொண்டது.

ஒலுமடு சிறு கடைத்தெருவின் அண்மையில், கிழக்குப் பக்கமாகச் செல்லும் வீதியின் அருகாமையில், மேட்டுக் காட்டு நிலத்தைச் தெரிவு செய்தார். மரங்களை வெட்டி, அடி மரத்தைக் கிளறிப் புரட்டினார். வெட்டிய மரங்களில் நேர்த்தியானவற்றைக் கொண்டு குடிசையமைத்தார். வெட்டிய அலம்பல் தடிகளைக் கொண்டு எல்லையிட்டு வேலியடைத்தார். மனைவியும் பிள்ளைகளும் நிலத்தைக் கூட்டித் துப்புரவு செய்தார். குடிசையைச் சுற்றி எல்லையிட்டிருந்த நிலத்தைக் கொத்திப் பண்படுத்தி வெண்டி, கத்தரி, மிளகாய் வைத்தார். ஆனால் இப்படி நடக்குமென அவர் எதிர்பார்க்கவில்லை. குடிசை ஒழுகியது. செடிகள் நோயினால் பீடிக்கப்பட்டன.

அருணாசலத்தாருக்கு இரவு நித்திரை வரவில்லை. தோட்டத்தின் நிலைகண்டு சிந்தனைக் குழப்பம் ஒரு பக்கம் – மழையில் தரை தெப்பமாக நனைந்திருந்ததால் தூங்கமுடியாத நிலை மறுபக்கம். பிள்ளைகள் சாக்கில் சுருண்டு தூங்கிக் கொண்டிருந்தார்கள். அருணாசலத்தாரின் மனைவி கமலம் கப்பில் சாய்ந்தபடி யோசித்துக் கொண்டிருந்தாள். மனைவியைப் பார்க்க அருணாசலத்தாருக்கு அழுகை வந்தது.

"இஞ்சருமப்பா என்ன யோசிக்கிறாய், பேசாமல் போய்ப் படு"

கூறிவிட்டு எழுந்து சாக்கைப் போட்டு சாய்ந்து கொண்டார் அருணாசலத்தார். வாழ்க்கைப் பிரச்சினைகள் நினைவில் வந்து மண்டையைப் பிளந்தன.

"இஞ்சாருங்கோ எழும்புங்கோ, விடிஞ்சு எவ்வளவு நேரமாப் போச்சு படுத்திருக்கிறியள்"

"இப்ப ஏன் என்னை அவசரமாய் எழுப்பிறாய். எழும்பி வாடுற மரஞ்செடியைப் பாத்து அழச் சொல்லுறியே"



"அழத் தேவையில்லை. கடவுள் புண்ணியத்துலை எங்களுக்கு அதிஸ்டம் வந்திருக்குப் போல"

"என்ன கமலம் சொல்றாய்?"

"உங்களுக்கு விசயம் தெரியாதே? மூவாயிரம் பேருக்கு மண்மீட்பு நிதியெல்லே குடுக்கப் போயினமாம். நீங்கள் பேப்பருகளையும் பாக்கிறேல்லை. எங்களுக்கும் விழுந்திருக்கலாம். தம்பையாண்ணை தான் காலமை வந்து சொல்லிப்போட்டுப் போனவர். இண்டைக்குத் தானாம் மீளளிக்கிறது? மாங்குளம் பள்ளிக்கூடத்திலயாம். நேரத்துக்கும் போய் காரியத்தைப் பாருங்கோ."

அருணாசலத்தார் அவசரமாக எழுந்து காலைக்கடன்களை முடித்தார். அடையாள அட்டையையும் மீட்புநிதிக் கடன் பத்திரத்தையும் எடுத்துக் கொண்டு சைக்கிளில் விரைந்தார். அவரது மனம் மகிழ்ச்சியில் குளித்தது. தனது முயற்சி வீண்போகாது என்று மனதில் தெம்பு ஏற்பட்டது.

பணத்தைப் பெற்றுக் கொண்டு மாங்குளம் கடைத்தெருவில் பயிருக்கு அடிக்க கிருமி நாசினி வாங்கினார். குடிசை மேய கிடுகுக்கும் சொன்னார். அன்று சமைப்பதற்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார் அருணாசலத்தார்.

"கமலம்"

"என்னங்க"

"நாங்கள் பத்தாயிரமெல்லே கட்டினாங்கள்"

"ஓமோம்"

"இப்ப பன்னிரண்டாயிரத்து ஐநூறு தந்திருக்கினம்"

"அப்பிடியே! அப்ப தேசிய பாதுகாப்பு நிதிக்கு கடன் கேக்கக்கை சிலபேர் என்னவெல்லாம் சொன்னவை"

"அது கிடக்கட்டும். இந்தா சாமான் சமை. நான் செடியளுக்கு மருந்தடிக்க வேணும். கிடுகுக்கும் சொல்லிப் போட்டு வந்தனான். நாளைக்கு எப்பிடியும் வீட்டை மேஞ்சுபோட வேணும்"

காலைச் சூரியன் தன் மென் கதிர்களைப் பூமியில் பரவ விட்டிருந்தான். அருணாசலத்தார் குடிசையின் சுற்றாடலுக்கு வந்தார். தன் தோட்டத்தைப் பார்த்துப் பூரித்துப் போனார். வெண்டியும், கத்தரியும் நன்கு மதாளித்து செழித்து வளர்ந்திருந்தன. காய்கள் நிறைந்திருந்தன. மிளகாய்ச் செடிகள் பூவும் பிஞ்சுமாகச் சடைத்திருந்தன.

கமலம் கத்தரி, வெண்டிக் காய்களைப் பறித்து சந்தையில் விற்பாள். அந்த வருமானம் அவர்களின் சீவியத்திற்குப் போதுமானதாக இருந்தது.

மணிச் சத்தம் கேட்டு வாசலுக்கு வந்தார் அருணாசலத்தார். தபால்காரன் கடிதமொன்றைக் கொடுத்துவிட்டு சென்றான். கடிதத்தின் முகவரி எழுத்தைப் பார்த்தால் யார் போட்டது எனப் புரிந்துகொண்டார் அருணாசலத்தார்.

"ஆருங்கோ கடிதம் போட்டிருக்கு?"

"வேற யார்! குணம் வாத்தியார் யாழ்ப்பாணத்திலையிருந்து போட்டிருக்கிறார்"

"என்னவாம் வாத்தியார்?"

அருணாசலத்தார் கடிதத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார்.

அன்பின் அருணாசலம் அறிவது, நாங்கள் நலம் (கடிதத்தில் மட்டும்) நீங்கள் சுகமே இருக்க இறைவனை வேண்டுகிறோம்.

மேலும் இங்கு மின்சார வசதி, கல்வி வசதி, அபிவிருத்தித் திட்டங்கள், உணவு வசதி, வேலை வாய்ப்பு என பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன (சிறிலங்கா வானொலிச் செய்தியில் மட்டும்)

உண்மை நிலை என்னவென்று உங்களுக்கு ஓரளவு தெரியுமென்று நினைக்கின்றேன். இருந்தாலும் அந்த துன்பவியல் வாழ்வை எழுதியாவது ஆத்ம திருப்தி அடையலாமென நினைத்து எழுதுகிறேன்.

நீங்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்தபோது நாங்களும் இடம்பெயர்ந்திருக்கலாமென நாளாந்தம் நினைத்துக் கவலைப்படுகிறேன். உவ்விடம் குடிசை வீடும் ஒரு நேரக் கஞ்சியென்றாலும் சுதந்திரமாக வாழுவீர்களென நினைக்கிறேன். இங்கு கல்வீட்டில் வசித்தாலும் மரணப் பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஊரெங்கும் ஒரே பதற்றம். பதகளிப்பு. பொழுதுபட்டு சிறிது நேரத்திலேயே சனங்கள் கிடைத்ததைக் கொண்டு தங்கள் வயிறுகளை அரைகுரையாக நிரப்பிக் கொள்வர். குப்பி விளக்குகள் அணைந்து ஊர் இருளில் மூழ்கிவிடும். இரவிலோ பகலிலோ எந்த வேளையிலோ என்னதான் நடக்குமோ என்ற மன அவஸ்தை சனங்களுக்கு.

எந்த நேரத்திலும் ஊர் சுற்றிவளைக்கப்படலாம். வேலியை வெட்டிக்கொண்டு பல திக்குகளாலும் வெறியர்கள் வருவார்கள். தேடல் ஆரம்பிக்கும். வீட்டைச் சல்லடை போட்டு தேடுவார்கள். ஊரில் ஒரே ஆரவாரம் அமர்க்களம். தேடும் வெறியர்களின் கண்கள் பெண்களில் மொய்த்திருக்கும். ஊர் அல்லோலகல்லோலப்படும்.

வெறியர்கள் போனபின்னர் எப்படியும் ஊரில் எந்த மூலையிலாவது அழுகுரல் கேட்கும். இளைஞர்கள் கைது

தொடர்ச்சி 12ம் பக்கம்......

www.tamilarangam.net



## விடிவெள்ளி.... (சிறுகதை)

செய்யப்பட்டிருப்பார்கள். பெண்கள் இம்சைப்படுத்தப்பட்டிருப்பார்கள். பெறுமதியான பொருட்கள் பறிக்கப்பட்டிருக்கும்.

வெறியர்களின் காவலரண்கள் பாடசாலைகளிற்கு முன்பாகவும், பல்கலைக் கழகத்தைச் சுற்றியும் போடப்பட்டுள்ளன. மாணவர்களும், ஆசிரியர்களும் கடுமையான சோதனைக்கு உட்பட்டு இடைஞ்சல் படுகிறார்கள்.

கிருசாந்தி மீதான பாலியல் வல்லுறவு படுகொலைச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இது ஒரு சம்பவம் மட்டுமே வெளியில் வந்திருக்கிறது. வெளிவராமல் காற்றோடு போன சம்பவங்கள் எத்தனையோ. கிருசாந்திக்கு முன்னர் நடந்தவையல்ல, கிருசாந்திக்குப் பின்னரும் தொடர்கின்றன.

எங்களுடைய அரிய வளமான பனைகள் பல்லாயிரக்கணக்கில் வெட்டி விழுத்தப்படுகின்றன. மக்களின் வாழ்வின் பல்வேறு அம்சங்களிலும் வெறியர்கள் கோரங்களைப் பதித்துள்ளனர். எங்களுடைய பல்வேறு வளங்கள் சிதைக்கப்படுகின்றன. பண்பாடு கலாச்சாரம் சீரழிகிறது.

"இவங்களாலதானே எல்லாம் வந்தது. இவங்கள் பேசாமல் இருந்திருந்தா ஒரு பிரச்சினையுமில்லை" என சொன்ன சிலர்கூட, எப்போது இவ்விடம் வந்து எங்களைக் காப்பாற்றுவார்கள் என எதிர்பார்த்திருக்கிறார்கள்.

என்றோ ஒருநாள் எதிரியை அழித்து எங்களுக்கு விடிவைத் தருவார்கள் என்ற நம்பிக்கையில் சனங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மேலும் உங்களுக்குத் தெரியும் தானே என்ர பொடியன் இயக்கத்திலையெண்டு. அவனை உவ்விடம் கண்டீர்களா? என்ன மாதிரி சுகமா இருக்கிறானா?

முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்கப்பட்டு ஆயிரக்கணக்கில் இராணுவம் செத்ததாக அறிந்தோம். சனங்களுக்கு ஒரே மகிழ்ச்சி. எங்களின் துயர நிலையை ஓரளவு எழுதியுள்ளோன். வேறு என்ன? இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

அருணாசலத்தாரின் கண்கள் கலங்கி இமைகளில் நீர் திரைமிட்டது. கடிதத்தை மடித்து வைத்துவிட்டு கண்களைத் துடைத்தார்.

"என்னங்கோ வாத்தியாருக்கு அவற்றை பொடியன் முல்லைத்தீவுச் சண்டையில் செத்தது தெரியாது போலகிடக்கு"

"ஓம் கமலம், பாவம் அதுகள்"

அருணாசலத்தார் மிகுந்த கவலையுடன் பதில் கடிதத்தை எழுதத் தொடங்கினார்.

நவம்பர் 27 மதியம்

மழை மேகம் சூழ்ந்து மழை தூறிக் கொண்டிருந்தது. காடு நீரில் குளித்து வெளிப்பாக இருந்தது. பறவைகளின் கானம் காற்றில் கலந்தது.

அருணாசலத்தார் சுறுசுறுப்பாக குளித்தார். உடுப்புப் பெட்டியின் அடியில் வைத்திருந்த சேட்டையும் வேட்டியையும் அணிந்தார்.

கமலத்துக்கு கணவனின் செய்கை ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. என்றுமே இப்படி வெளிக்கிடாதவர் இன்று ஏன் இப்படி என நினைத்தவள் அடுப்படியை விட்டு வெளியே வந்தாள்.

"இஞ்சருங்கோ எங்கை துலைக்கே வெளிக்கிடுறியள்?"

"இண்டைக்கு என்ன நாள் தெரியுமே?"

"ஓமோம். தெரியும் மாவீரர் நாள்"

அதுதான் மாவீரர் துமிலும் இல்லத்துக்கு போகப் போறன். இவன் சின்னவனை வெளிக்கிடுத்து கூட்டிக் கொண்டு போகப் போறன்.

கமலம் சின்னவனைக் குளிப்பாட்டி வெளிக்கிடுத்திவிட்டாள். தகப்பனும், மகனும் பேரூந்தில் ஏறித் துயிலும் இல்லத்துக்குப் பயணித்தனர்.

தெருவெங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. தாயகப் பாடல்கள் காற்றில் கலந்தவண்ணமிருந்தன.

மாவீரர் துமிலுமில்லம் மக்களால் நிரம்பி வழிந்தது. பெற்றோர்கள், உறவினர்கள் கல்லறைகள் முன்பாக சுடரேற்றக் காத்து நின்றனர்.

அருணாசலத்தார் வாத்தியாரின் மகனின் கல்லறைக்கு முன்பாக வந்து நின்றார். அருணாசலத்தாரின் சின்னவன் அருகில் வந்து கைகட்டி நின்றான்.

குறித்த நேரத்தில் மணிகள் ஒலிக்க சுடரேற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

தலைவரின் உரையைக் கேட்ட அருணாசலத்தாரின் மனதில் நம்பிக்கை என்னும் விருட்சம் ஆழமாக வேர்விட்டது. சின்னவனைக் கூட்டிக்கொண்டு தெருவுக்கு வந்தார் அருணாசலத்தார்.

திருவிழாக்களில், கடைத்தெருவில் உணவுப் பண்டங்களை வாங்கித் தரும்படி அடம்பிடிப்பான் சின்னவன். ஆனால் இன்று வெளியில் தின்பண்டக் கடைகளைக் கண்டும் அமைதியாக வரும் சின்னவனைக் கண்டு ஆச்சரியப்பட்டார் அருணாசலத்தார்.

சின்னவன் கடந்து செல்லும் போராளிகளையே பார்த்தபடி வந்தான். தெருவில் வந்த போராளிகளில் ஒருவன் சின்னவனின் கன்னத்தில் தட்டிவிட்டுச் சிரித்தபடி சென்றான்.

"சின்னவன் கச்சான் வேண்டித் தரட்டே?"

"வேண்டாம்"

"அப்ப ரொபி வேண்டித் தரட்டே?"

"வேண்டாம்"

"அப்ப என்ன வேணும்"

"உந்த மாமாக்கள் வைச்சிருக்கிற துவக்கு வேணும்"

"ஏன்?"

"ஆமியைச் சுடப்போறன்"

ஒரு கணம் அதிர்ந்து போனார் அருணாசலத்தார். மறுகணம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு சின்னவனைத் தூக்கி இரண்டு கன்னங்களிலும் மாறிமாறி முத்தமிட்டார். தெருவெல்லாம் ஒளிவெள்ளத்தில் குளித்துக் கிடந்தது. ✳

# அந்தப்பழம் புளிக்கும்

'தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசினால் வெற்றி கொள்ளமுடியும் ஆனால் தற்சமயம் இராணுவரீதியில் வெற்றி கொள்ள விருப்பமில்லை' என ஆச்சரியம் அளிக்கும் அறிவிப்பு ஒன்றை BBC தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி யில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார். கடந்த 3 வருடங்களாக யுத்தம் முடி வடைவதற்கான கால எல்லையை மாறிமாறி நிர்ணயித்துப் பெரும் படையெடுப்புகளை நடத்தி வரும் சிறிலங்கா ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான சந்திரிகா குமாரதுங்கா யுத்தத்தில் வெற்றிபெற விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளமை மக்களுக்கு ஆச்சரியம் அளிப்பதில் அதிர்ச்சியடைய எதுவுமில்லை. ஏனெனில், சந்திரிகா அரசாங்கம் யுத்தத்தில் காட்டும் அக்கறையானது உலகப் பிரசித்தமானதாகும். சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் போட்டியிட்ட போது அன்றைய ஆழும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி யுத்தத்திற்கென செலவீடு செய்த சுமார் 2400 கோடி ரூபாவினால் நாட்டின் பொருளாதாரமே அழிக்கப்படுவதாகக் குற்றம் சாட்டியது. தாம் ஆட்சிக்கு வந்தால் யுத்தம் உடனே நிறுத்தப்படும் எனவும், யுத்தத் திற்கென செலவீடு செய்யும் நிதி நாட்டு அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் எனவும் வாக்குறுதி செய்தது. ஆனால், பதவிக்கு வந்து 3 ஆண்டுகள் ஓடிவிட்ட நிலையில் சந்திரிகா அரசாங்கம் சமர்ப்பித்த 3 வரவு செலவு திட்டங்களிலும் யுத்தத்திற்கான செலவீடு முன்னையவற்றைவிட மிக உயர்ந்த அளவிலேயே இருந்தது. அதிலும் 1997-ம் 1998-ம் ஆண்டுக்கான செலவீடானது கடந்தகால ஒதுக்கீட்டை விட 25 வீதத்துக்கும் மேலானது. இச்செலவீடு காரணமாக மக்கள் நலன் பேணும் தேர்தல் வாக்குறுதிகள் யாவும் சிறிலங்கா அரசினால் கைவிடப்பட்டதோடு யுத்தம் முடிவடையும் வரை தேர்தல் வாக்குறுதிகளை நிறைவு செய்ய முடியாது எனவும் அவ் அரசாங்கம் கூறிவருகின்றது. அத்தோடு யுத்தம் மிக விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதோடு அபிவிருத்திப் பணிகள் முடுக்கிவிடப்படும் எனவும் தெரிவித்துவருகின்றது. இப் பொருளாதாரச் செலவீட்டினைவிட போரிடும் சிறீலங்கா இராணுவம் பெரும் ஆளணி இழப்பையும் தளபாட இழப்புக்களையும் சந்தித்து வருகின்றது. கடைசியாக இடம் பெற்றுவரும் ஜெயசிக்குறு படை நடவடிக்கையில் மட்டும் சுமார் 2500 படையினரை சிறிலங்கா அரசு இழந்துள்ளதோடு பல நூறு கோடி ரூபாய் பெறுமதியான ஆயுதங்களைப் பறிகொடுத்தும் உள்ளது. இவ்வாறான இழப்பீடுகள் மத்தியிலும் பி.பி.சி (BBC) பேட்டியில் யுத்தத்தில் வெற்றிபெறும் யோசனை சிறிலங்கா அரசாங்கத்திற்கு இல்லையென சந்திரிகா கூறியிருப்பதானது பல கேள்விகளையும் எழுப்புவதாக உள்ளது. ஒருபுறம் இவ்வாறான இழப்பு, செலவீடு மத்தியிலும் வெற்றிபெற விரும்பாத யுத்தம் ஏன் நடத்தப்படுகிறது என்ற கேள்வியை எழ வைக்கின்றது. மறுபுறம் யுத்தத்தில் வெற்றிபெறும் நம்பிக் கையை ஜனாதிபதி சந்திரிகா இழந்துவிட்டாரா? என எண்ண வைக்கின்றது. இதில் யுத்தத்தில் வெற்றியீட்ட முடியும் என்ற நம்பிக்கையை சந்திரிகா இழந்துவிட்டார் என்ற காரணமே பொருத்தப்பாடானதாகும். ஏனெனில், பெரும் யுத்தம் ஒன்றைப் பெரும் செலவீடுகள் இழப்புக்கள் மத்தியில் நடத்தும் ஒருவர் அதில் வெற்றி பெறுவது எமது நோக்கம் இல்லை எனக் கூறுவது இயலாமையை மறைப்பதற்கான ஒரு வழிமுறையாகவே நிச்சயம் இருக்க முடியும். இல்லாவிடில் அவர் புத்திசுவாதீனம் அற்றவராகவே இருக்க முடியும். ஆனால், சிறீலங்கா ஜனாதிபதி அவ்வாறான கட்டத்தை இன்னும் அடையவில்லை என்றே நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், ஜனாதிபதி சந்திரிகா இதனால் யுத்தத்தை நிறுத்துவார் என்றோ தோல்வியை ஏற்றுக்கொள்வார் என்றோ அர்த்தமில்லை.

ஒருவேளை யுத்தத்தை நடாத்துவது பயனில்லை என்று உணர்ந்து கொண்டாலும் கூட, ரத்வத்தை போன்றோரும் அவரைச் சூழ உள்ளோரும் சிறிலங்காவை ஆட்டிப்படைக்கும் பௌத்த சிங்களப் பேரினவாதமும் யுத்த த்தை நிறுத்த அனுமதிக்க மாட்டார்கள்.

ஏனெனில் அவர்களின் குறி இந்த யுத்தத்தில் வெற்றி என்பதை விட இன அழிப்பு என்பதே ஆகும். ✳

> "தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசினால் வெற்றி கொள்ளமுடியும் ஆனால் தற்சமயம் இராணுவரீதியில் வெற்றிகொள்ள விருப்பமில்லை"
>
> **- சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா (பி.பி.சி (BBC) உலகச்சேவை தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலிருந்து)**

> **பெரும் யுத்தம் ஒன்றைப் பெரும் செலவீடுகள் இழப்புக்கள் மத்தியில் நடத்தும் ஒருவர் அதில் வெற்றி பெறுவது எமது நோக்கம் இல்லை எனக் கூறுவது இயலாமையை மறைப்பதற்கான ஒரு வழிமுறையாகவே நிச்சயம் இருக்க முடியும்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தென் தமிழீழத்தில் கொலை செய்து எரிக்கப்பட்ட தமிழ் மக்கள்

**– உண்மைச் சம்பவம் –**

இரண்டாம் ஈழப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது. சிறிலங்கா அரசின் இராணுவ சீருடை தரித்த கொலைப்படையும், அதி உயர் பயிற்சி பெற்ற 'எஸ்.ரி.எப்' என்ற விசேட அதிரடிப்படை பொலிசாரும் அக்கரைப்பற்று இராணுவ முகாமிலிருந்தும் கோமாரி இராணுவ முகாமிலிருந்தும் முன்னேறி வந்து சங்கமன் கண்டி, காஞ்சிரங்குடா, விநாயகபுரம், திருக்கோவில், தம்பிலுவில், சின்ன முகத்துவாரம், என அக்கரைப் பற்றிலிருந்து சோமாரி வரைக்குமான தமிழ்க் கிராமங்களை அழித்தும் எரித்தும் அங்குள்ள மக்களை வெட்டியும் சுட்டும் கொலை செய்தனர். இதனால் அங்குள்ள மக்கள் உணவு, நீர் இன்றி காடுகளில் பதுங்கி வாழ ஆரம்பித்தனர். இந்நிலையில் விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி அங்குள்ள மக்களுக்கு பகிரங்க கூட்டம் ஒன்றை வைத்து நாம் இனி எவருக்கும் ஒரு ஆபத்தும் விளைவிக்க மாட்டோம், எல்லாரும் அவரவர் கடமைகளைச் செய்யலாம் என்று ஆசை வார்த்தைகளை அள்ளி வீசினான். படிப்படியாக காடுகளிலும் பற்றைகளிலும் உள்ள மக்கள் தங்கள் தங்கள் கிராமங்களுக்கு வந்து வீட்டுடன் குடியமரத் தொடங்கினார்கள்.

**–லக்சுமிகாந்தன் –( தமிழீழம் )**

> **சீருடை அணிந்த காடையர்கள் தங்கள் துப்பாக்கிகளை சுடு நிலைக்கு கொண்டு வந்து விட்டார்கள். வரிசையில் உள்ள ஒவ்வொருவரும் அம்மா... என்ர அம்மா பிள்ளையாரே என்று ஒவ்வொரு முறை கத்திவிட்டு நிலத்தில் விழுந்து துடிதுடித்து மரணவேதனையில் உழலுகின்றார்கள்.**

தம்பிலுவில் கிராமத்தில் அன்று வெள்ளிக் கிழமை – சிவராத்திரி விரதம் அனுட்டித்துவிட்டு காலை 6.00 மணிக்கு ஒன்றாக வீடு திரும்பிய நடராசா பரம், இராசு, சிவனடியார் இராசு ஆகியோரைக் கடந்து சென்ற இராணுவ வண்டி 5 யார் தொலைவில் பரத்தின் வீட்டின் முன்பாக நின்றது. அந்த மூன்று ஜீவன்களையும் பலாத்காரமாக ஏற்றிக் கொண்டு, ஏற்கனவே வாகனத்தில் பிடித்து வைக்கப்பட்டிருந்த இன்னும் சில தமிழ் இளைஞர்களுடன் தமிபிலுவில் கிராமத்திலிருந்து ஏழு மைல் தொலைவிலுள்ள சாகாமம் தாலி போட்ட ஆறு வயல் பிரதேசத்தை நோக்கி விரைந்தது.

அன்றையதினம், விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட 75 பொலிசாரின் சடலங்களை சாகாமப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளால் எரிக்கப்பட்டு சரியாக ஒரு மாதமாகும். இறந்த சகாக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகத்தான் அங்கு வேள்விக்கு அழைத்து வரப்படுகிறோம் என்பது அந்த அப்பாவி ஜீவன்களுக்கு இன்னும் விளங்கவில்லை. பொலிஸ்காரர் எரிக்கப்பட்ட இடத்தில் இருந்து தற்போது எஸ்.ரி.எப். முகாமிட்டிருக்கும் சாகாமம் கற்குவாலி வங்களாச் சந்தி 1000 யார் தூரம் இருக்கும். பிப. 6.30 மணி – மங்கிய இருள்பொழுது கூப்பிட்ட குரலுக்குக் கூட எவரும் வரமாட்டார்கள். இராணுவத்தினரைத் தவிர வேறு சன நடமாட்டமில்லை. அவ்விடத்தில் வைத்து சிங்கள – முஸ்லிம் கொலைக்கும்பலால் அந்த வேள்விக் கடாக்கள் கைகள் கட்டப்பட்டு ஒருவர் பின் ஒருவராக கூட்டிச் செல்லப்படுகின்றனர்.

அந்த வரிசையில் இறுதியாகச் செல்பவர்......அதோ அவர்.......அவர்தான் சிவனடியார் இராசு. இவர் ஒரு ஒலிபெருக்கிக் கடைச் சொந்தக்காரர். தனக்குப் பின்னால் வந்த முஸ்லிம் காடையனை அவருக்கு நன்றாகத் தெரியும். ஒருமுறை விசேட அதிரடிப்படையினரின் இனச்சுத்திகரிப்புச் சூட்சுமத்தில் ஒன்றாக அக்கரைப்பற்று தமிழ் – முஸ்லிம்களுக்கு இடையில் ஒரு கலவரம் ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தின்போது சிவனடியார் இராசுவால் அக்கரைப்பற்று கிராமத்தில் வைத்து காப்பாற்றி உணவு கொடுத்து பாதுகாப்பாகத் தனது வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டவன், தற்போது அந்தக் கொலைக்கும்பலில் அவனும் ஒருத்தனாக, இராசுவிற்கு அருகாகச் சென்று கொண்டு இருக்கிறான். அவனுக்கு அந்தப் பழைய ஞாபகம் வந்திருக்க வேண்டும். அன்று இராசு கைவிட்டிருந்தால் அந்த இடத்தில் தன்னுடைய உயிர் என்ன பாடு பட்டிருக்கும் என்பதுவும் அவனுக்கும் புரிந்ததாலோ என்னவோ, வரிசையில் கடைசியாகச் சென்று கொண்டிருந்த சிவனடியார் இராசுவை நோக்கி "அண்ணே அவங்கள் உங்களை சுடக் கொண்டு போறாங்க, நீங்க இந்தப் பத்தைக்கால ஓடித் தப்புங்கோ" என்றான். சிவனடியார் இராசுவுக்கு தனது உயிரைக் காப்பாற்ற ஓடித்தப்ப வேண்டும் என்ற ஆசை மறுபுறம் தன்னை ஓடவிட்டுவிட்டு சுடுவார்கள் என்ற பயம் இரண்டுக்கும் மத்தியில் தத்தளித்த இராசு தனக்கு அருகால் இருந்த வாய்க்கால் வழியாக, 'தவண்டு தவண்டு' சென்று அருகிலுள்ள சூரைப் பத்தைக்குள் நுழைந்து அங்கு காணப்பட்ட புற்றின் மறைவில் இருந்துகொண்டு நடக்கப் போகும் சம்பவத்தை அவதானிப்பதற்காகவும் தன் உயிரை காடைக் கும்பலிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவும் பயப்பிராந்தியுடன் உன்னித்து அவதானித்துக் கொண்டிருந்தார்.

எல்லோரும் காடையர்கள் புடைசூழ சடலங்கள் எரிக்கப்பட்ட இடத்தை நோக்கி வருகிறார்கள். ஆ....ஆ....இப்ப எல்லோரும் வந்துவிட்டார்கள். நாலாவதும் ஐந்தாவதுமாகத் தென்படுவது இராசுவும் (சைக்கிள் கடை), நடராசா பரமுவும். இப்போது அந்த சீருடை அணிந்த காடையர்களில் ஒருவன் ஏதோ சொல்கிறான். அது பத்தைக்குள் இருந்த சிவனடியார் இராசுவுக்கு விளங்கவில்லை. இப்போது சிவனடியார் இராசு கண்ணால் காண்கிறார். இராசு உட்பட அந்த வரிசையிலுள்ள அனைவரும் கைகள் கட்டப்பட்ட நிலையில் – தோற்றத்தில் விம்மி விம்மி அழுவது போல் தென்படுகிறது. ஆனால் ஒலிபெருக்கிக் கடை இராசுவிற்கு பயப்பிராந்தியால் காதுகள் அடைத்துவிட்டதோ என்னவோ அவர்கள் கத்துவது ஒன்றும் கேட்கவில்லை. இப்போது எல்லோரும் அந்த எரிந்த சடலங்களின் சாம்பல் மேட்டை ஒரு சுற்று சுற்றி வந்து வரிசையாய் நிற்கின்றார்கள்.

சீருடை அணிந்த காடையர்கள் தங்கள் துப்பாக்கிகளை சுடுநிலைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். வரிசையில் உள்ள ஒவ்வொருவரும் அம்மா என்ர அம்மா – பிள்ளையாரே என்று பலமாகக் கத்திவிட்டு நிலத்தில் விழுந்து துடிதுடித்து மரண வேதனையில் உழலுகிறார்கள். அங்கு உள்ளவர்களில் பரம் வயதில் சிறியவன் – தோற்றத்திலும் கூட, சைக்கிள் கடை இராசு வயதில் மூத்தவன் (35 வயது மதிக்கலாம்) சிவனடியார் இராசுவின் கண்முன்னால் அத்தனை உயிர்களும் துடிதுடித்து சித்திரவதைப்பட்டு இறக்கின்றனர். இராசு உணர்கிறான். இக் காடையர்கள் அந்தவேள்வியில் கடாக்களைச் சுட்டுக் கொல்லவில்லை. துப்பாக்கியில் பொருத்தப்பட்ட கத்தியால் குத்திக் கொன்றிருக்கிறார்கள். அந்த காடைக்கும்பல் சந்தோசத்தில் கையுயர்த்தி குதூகலித்துக் கொண்டு மதுவை மென்று குடித்துக் கொள்கின்றனர். அந்த இராணுவ வண்டி 'விர்' எனப் பறந்து இருளில் மறைகிறது. இதுவரைக்கும் இராசு பிரக்ஞை தவறவில்லை. மெல்ல மெல்ல தவழ்ந்து அரைகுறையாய் எரிந்து கொண்டிருக்கும் பரத்தையும் இராசுவையும் அழுது கொண்டே தொட்டு வணங்கிவிட்டு சூரை முட்களால் பதம் பார்க்கப்பட்ட உடல் நோவையும் சகித்துக் கொண்டு அந்த ஆளரவமற்ற இருள் சூழ்ந்த சூனியப் பிரதேசத்தை ஊடறுத்து தூரத்தே தெரியும் ஊரை நோக்கி தள்ளாடி நடக்க ஆரம்பித்து விட்டார். ஊரை அண்மித்து அங்கு ஒலிக்கும் தமிழ்க்குரல்களை உன்னிப்பாகக் கேட்கின்றான். அந்த இடத்தைத் தாலி போட்ட ஆறு ஆற்றுக் கண்டம் என அழைப்பர். அழுகையை (அடக்கியபடி) அண்ணே எனச் சத்தமிடுகிறான். சொந்தமில்லாத தமிழ் உறவுகள் ஓடிவருகின்றன. இராசு மூர்ச்சையாகி விழுகின்றான். ✷


இலண்டனில்

## மாவீரர் நாள் 97

**இடம் :**
Waterfront Leisure Centre
High Street,
Woolwich,
London SE18

**காலம் :**
29-11-97
சனிக்கிழமை
மாலை 6.30 மணி

வீரவணக்கத்துடன் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்

மாவீரர் நாள் நடைபெறும் மண்டபத்திற்கான போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு :U.T.O, ☎ 0171 - ,403 4554, 0956 314 370, 0946 329 660, 0956 256 098



வெளிவந்துவிட்டது

## ஒளிவீச்சு

(நவம்பர் - டிசம்பர் 1996)

**நவம்பர் :**
- செய்திச் சரம்
- மாவீரர் நிகழ்வுகள் 1996
- காந்தருபன் அறிவுச்சோலை 3 ம் ஆண்டு நிறைவு விழா
- சமகாலப் பார்வை
- காட்சியும் கானமும்
- கலையும் மக்களும்
- இன்னும் பல செய்திகளுடன்...

**டிசம்பர் :**
- செய்திச் சரம்
- சுதந்திர தாகம்
- புலுகுணாவை முகாம் தாக்கி அழிப்பு
- நத்தார்ப் பண்டிகை நிகழ்வுகள்
- சமகாலப் பார்வை
- இன்னும் பல செய்திகளுடன்...
- குறும்படம் - "எதிர்காலம் உனதல்ல'

**இவ் ஒளியிழை நாடாவினை தமிழ் கடைகளிலும், பிராந்தியத் தொண்டர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.**

மேலதிக தொடர்புகட்கு : U.T.O. ☎ 0171-403 4554


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## விடிவைத் தேடும் இதயங்கள்!

பழஞ்சோறுதான் இவர்க்குண்டா?
தாமரைக்கிழங்குதான் கிட்டியதா?
அரவம் நிறைந்த அடர்காடு ஐயா!
அகதியாய் கொடும் அவலம் ஐயா!
படுக்க இடம் பற்றைதான் உண்டோ?
பாதுகாப்புதான் இவர்க்குண்டோ?
ஒதுங்கி ஒதுங்கி ஓடியே களைத்த இதயங்கள்!
விடிவைத் தேடி எங்கும் எம் இரத்தங்கள்!

**–இந்திரன் அஜந்தினி, யேர்மனி.**

## நொந்த நெஞ்சங்களே!

சொந்த நாட்டிலே
குந்த இடம் தேடும்
நொந்த நெஞ்சங்களே!
உங்கள் உண்டி கிடைத்திட
வஞ்சகம் செய்பவர்
வெந்து சாகுவர்!
சந்ததி வாழ்ந்திட எம்மினத்தவர்
கரம் உயர்த்துவர்!

**–திருமதி சந்திரவதனா செல்வகுமாரன், யேர்மனி.**



## கோலம் அழியாது!

கூரைகள்தாம் எமக்கில்லையடா–ஆயினும்
குந்தியிருப்பது நாம் எம்மண்ணிலடா
உங்கள் கைகளினால் எங்கள்
கோலத்தை மட்டும்தான் கலைக்க முடியுமடா

நிறுத்தி நிதானித்து நாம் போட்ட கோலத்தை
நிர்மூலம் ஆக்கியதாய் நினைத்து மகிழாதே–நீ.
அழித்த கோலத்தில் விடுபட்ட புள்ளிகள் நாம்
ஆக்கிடுவோம் புதுக்கோலம் ஆக்கிரமிப்பாளனே
பார்!

**–திருமதி நந்தாவதி பஞ்சலிங்கம், யேர்மனி.**

## விலைகொடுப்பு

கட்டிய வீடும்
தேடிய சொத்தும் விட்டு
காட்டிலும் மேட்டிலும்
வானமே கூரையாய்
வாழும் இவர்கள் வாழ்வு
எம் விடுதலைக்கான
விலைகொடுப்பு!

**–சில்லையூரான் ம. றொபேட்ராஜ்?**

## அன்புக்கரங்களே!

ஈழத்தில் இன்று நடப்பவையே இவை
ஈவிரக்கமற்ற கொடியவளின் ஆட்சியிலே
கொட்டும் மழையிலும் கொதிக்கும் வெயிலிலும்
வன்னிக் காட்டினிலே வாடி இருக்கும்
பிஞ்சுப் பாலகர்களின் பசி தீர்க்க
பாராமுகம்கொண்டு இருந்திடலாமோ
வள்ளல் மனத்துடனே வாரி வழங்கிடுவீர்!
வாழ்வு இனிக்க ஒரு வழியும் சமைத்திடுவீர்!

**–கிளியூர் ப. குகன், யேர்மனி.**

## ஏன் இந்த மௌனம்?

சிங்களக் கும்பலின்
சதிகாரத் தனத்தினால்
காடுகள்தான் – எம்மவர்க்கு
வீடுகள் ஆனதோ?
முள்தரைதான் படுக்கையானதோ
துன்புற்று துவளும்
எம்மினத்தின் நிலை கண்டும்
சர்வதேசமே! ஏன் இந்த மௌனம்?

**–பெலிசிற்றாஸ் ஜோசவ், சுவிற்சலாந்து.**

## இன்றேனும் உணர்வீரோ?

நவீன உலகெங்கும்
அகதியாய் இறங்கி நின்று,
உயரத்துடிக்கின்ற எம்மினமே!
கற்கால திசைநடந்து
சுகமெலாம் மறந்துபோன
இந்த உறவுகளின் அவலமெல்லாம்–
தாயக விடியலுக்காய் தந்திட்ட
விலைகளென இன்றேனும் உணர்வீரோ!

**–கேம்ராஜ், லண்டன்.**

## மண்துறவா மாணிக்கங்கள்

தெருவில் இருந்து புழுதி அழைந்து
மணல் சோறு ஆக்கி மகிழ்ந்த நாள்போய்
புற்றரவுப் பற்றை நடுவில்
பொங்கி உணவு உண்ணும் நேரம்
வந்து பகை துரத்தினாலும்
சொந்த மண்ணின் சுகந்தனை
துறக்காத நெஞ்சங்கள் – தூங்காது
விழித்தெழும் விழுதுகள் பரப்பி!

**–திருமதி. செல்லம்மா தம்பிப்பிள்ளை, டென்மார்க்.**

## நாங்களும் நீங்களும்

சுகவாழ்வும் சொத்தும் இழந்து
சுதந்திரமாய் வாழவென்று
எதிரிக்கெதிரியாய் வன்னிக்காட்டில்
அகதியாய் – அங்கு நீங்கள்.
சுகவாழ்வும் சொத்தும் தேடி–அகதி
அந்தஸ்த்தும் வேலையும் கோரி
சுதந்திரம் தேடப் பொழுதில்லாது
சோர்ந்து கிடக்கிறோம் – இங்கு நாங்கள்.

**–அமலா ஜெயந்தன்**

## விடுதலை நேசிக்கும் நெஞ்சங்கள்

கொளுத்தும் கோடை வெயில்
கொட்டும் மாரி மழை
மரக்கிளைகளே கூரை
தாய் மண்ணைப் பிரிந்திவர்பட்ட
சோதனைகள் வேதனைகள் எத்தனை?
விடுதலை நேசிக்கும்
நெஞ்சங்கள் சலிக்காது.
நம்பிக்கையொளியில் நிமிர்ந்து நிற்பர்!

**–தனம், பிரான்ஸ்.**

## நம்பிக்கை

சின்னஞ்சிறு வயதில்
மண்சோறு கறி, வீடு கட்டி
வாழ்ந்த நிகழ்வுகளா இவை–இல்லை
சிங்கள அரசின் இனவாதம் – எமக்கு
ஏற்படுத்திவிட்ட வடுக்கள்தான்!
ஆனாலும் நாம் கலங்கவில்லை
எம் தலைவன் எமதருகில்
இருக்கின்ற போதினிலே!

**–திருமதி ஜெகதீஸ்வரி சிவகுமார், யேர்மனி.**

## ஆக்கங்கள் அனுப்பியோர்

ஆக்கங்கள் அனுப்பியோர் அனைவருக்கும் நன்றி:

யேர்மனி– இ. சண்முகராசா, புவனேந்திரராசா தமயந்தி, அமலதாஸ், புங்கையூர் சி. அன்புதாசன், ச. மனோரதி, சிவலிங்கம் ராஜேந்திரன், எவ். பிறேமானந்தன், தென்கருணையூர் சிவசிறி, பாலசிங்கம் முருகதாசன், காவலூர் க. செல்வராசா, நடா.
சுவிற்சலாந்து – குருநகர் டியூக்
இத்தாலி – ப. நிமலதாஸ், றோ. ஸ்ராலின்.
நெதர்லாந்து – காம்பொன் அமலதாஸ்.
வல்வைக்கித்துள், மலரவன், சி. சத்தியகுமார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதினேழு

(தொடர்ச்சி)

கிற்றி திரும்பி, காவல் அறையை நோக்கி விரைவாக நடந்து சென்றாள்.

### அத்தியாயம் பதினெட்டு

டேவிட் "கிடியோன் திட்டம்" என்று விசித்திரமாகப் பெயர் சூட்டியிருந்த திட்டம் விரைவாகச் செயற் படுத்தப்பட்டது. கராலெலஸ்ஸில் பெருந்தொகையான பொருள்களுக்கான, போலி ஏற்றப்படும் பட்டியல் (Bills of Lading) களும், பிரிட்டிஸ் இராணுவ அடையாள அட்டைகளும், டவ் லன் டாவால் தயாரிக்கப்பட்டு கிற்றி பிறமென்ரிடம் கொடுக்கப்பட்டது. அவள் அவற்றை முகாமிலிருந்து எடுத்துச் சென்று அரி பென் கானனிடம் கையளித்தாள். ஏற்றப்போகும் பொருள் பட்டியல்களை (Bills of Lading) பெற்றுக் கொண்டதனால் பென் கானான் தன் திட்டத்தின் முதல் பகுதியை ஒப்பேற்றக் கூடியவனானான்.

சைப்பிரசைப் பற்றி முன்பு ஆராய்ந்தபோது, கராலெலஸ்சுக்கு கிட்டவாக பாமாகுஸ்ரா வீதியிலிருந்த ஒரு பிரிட்டிஷ் விநியோகக் களஞ்சியம் ஒன்றை அவன் நன்றாக கவனித்திருந்தான். அது பல ஏக்கர்கள் உள்ளடக்கியதாக, கனரக வண்டி களையும், வேறு வாகனங்களையும், ஒரு டசின் வரையான பிரமாண்டமான களஞ்சியங்களையும் கொண்டிருந்தது. போரின்

> **தங்கள் தாயகத்தை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட யூதமக்கள் 100க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனரல் 2000 ஆண்டுகளாக அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம் என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின் போது பிரார்த்தனையின் இறுதியில் கூறி வந்தார்கள்.**

போது மத்திய கிழக்கில் நிலை கொண்டிருந்த நேசநாட்டுப் படைகளுக்கு ஒரு பிரதான விநியோகக் களஞ்சியமாக

**லியோன் யூறிஸ்**

இது செயற்பட்டது. இப்போதும் சில பொருள்கள் அந்தப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த படைகளுக்கு கப்பலில் அனுப்பப்பட்டு வருவதோடு மிகுதியான பொருட்கள் தேவைக்கு மேலதிக பொருட்களாக (Surplus) பிரகடனப்படுத்தப்பட்டுத், தனியார் துறையினரால் கொள்வனவு செய்யப்பட்டு வந்தன. இந்தக் களஞ்சியத்திலிருந்து பாமாகுஸ்ரா துறைமுகத்துக்கு எப்போதும் ஏதாவது வகையில் பொருள்கள் போய் வந்து கொண்டிருந்தன.

மாண்ட்றியாவின் சைப்பிரஸ் – மெடிட்றேனியன் ஷிப்பிங் கொம்பனியே சைப்பிரசில் இருந்த பிரிட்டிஷ் இராணுவத்தின் முகவராக செயற்பட்டு வந்தது. இந்த வகையில் இந்தக் களஞ்சியத்தில் இருந்த சகல பொருள்களினதும், வகைகளையும், தொகைகளையும், மாண்டிறியா அறிய வந்திருந்தான். அவனிடம் ஏற்றப்போகும் பொருள்பட்டியல்களும் ஏராளமாக கைவசம் இருந்தன.

வியாழக்கிழமை காலை 8–00 மணிக்கு அரி பென் கானானும் வேறு 13 பால்மாக்குகளும், பிரிட்டிஸ் இராணுவ உடைகளில், பிரிட்டிஸ் ஆவணங்க ளுடன், களஞ்சிய பிரதான வாசலில் ஒரு பிரிட்டிஸ் டிரக் வண்டியில் வந்து இறங்கினர். செவ் ஜில்போவா, ஜோஆப் யார்கோனி, டேவிட் பென் அமி ஆகியோர் "வேலையாட்கள்" குழுவில் இருந்தனர்.

கப்டன் காலெப் மூர் என்ற பெயரில் அடையாள ஆவணங்களை வைத்திருந்த அரி, களஞ்சிய பொறுப்பதிகாரியிடம் தன் தேவைகள் குறித்த பட்டியல் ஒன்றை சமர்ப்பித்தான். அரியுடைய வேலை யாட்கள் குழு பட்டியலில் உள்ளவற்றைச் சேகரித்து, பாமாகுஸ்ரா துறைமுகத்தில் எஸ்.எஸ்.அச்சான் (S.S.Achan) என்ற கப்பலில் ஏற்றிவிடும்படி பணிப்புரை யிருந்தது.

போலியாகத் தயாரிக்கப்பட்ட இந்த ஆவணங்கள் எவ்வளவு துல்லியமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது என்றால், அந்தக் களஞ்சியப் பொறுப்பதிகாரிக்கு, காலெப் என்பது பைபிள் கதைகளில் மோசேசுக்கு ஒற்றனாகப் பணியாற்றியவனது பெய ரென்பதோ, அல்லது அச்சான் என்பது இல்லாத ஒரு கப்பலின் பெயரென்பதோ, அப்பெயர் ஜெறிக்கோவின் பொக்கிஷங் களைக் கொள்ளை அடித்தவன் பெயரென்பதோ சிறிதும் உறைக்கவில்லை.

பட்டியலில் முதலிடம் பெற்றிருந்தவை பன்னிரெண்டு ட்ரக்குகளும், இரண்டு ஜீப்புகளும் ஆகும். இவை அவைகளை நிறுத்தி வைத்திருந்த இடங்களிலிருந்து வெளியே உருட்டிக் கொண்டு வரப்பட்டு, "கப்டன் காலெப் மூர்" இடம் கையளிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து வேலையாட்கள் குழு களஞ்சியங்களில் இருந்து தங்களுக்குக் கிடைத்த புதிய ட்ரக்குகளில், அப்ரேடைற் அல்லது எக்ஸ்சோடஸ் கப்பலில் தப்பியோடவிருக்கும் முந்நூறு பிள்ளைகளின் பலஸ்தீனத்துக்கான பயணத்துக்குத் தேவையான சகல வற்றையும் ஏற்றிக் கொண்டனர்.

கப்பலில் ஏற்றப்பட வேண்டிய பொருட்களை ஏற்றுவதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த ஜோஆப் யார்க்கோனி பிந்திய ரக தொலைத்தொடர்பு சாதனம் தகரத்திலடைக்கப்பட்ட உணவுகள், வைத்திய பொருட்கள், டோச் வெளிச்சங்கள், சிறிய ரக ஆயுதங்கள், தண்ணீர் கலன்கள் போர்வைகள், காற்றுக்குளிரூட்டிகள் (Air - Conditioning Units) ஒரு ஒலி பெருக்கித் தொகுதி இன்னும் வேறு வகைப்பட்ட பொருட்கள் உட்பட்ட பட்டியல் ஒன்றைத் தயாரித்திரு ந்தான்.

தன்னுடைய பெரிய கரும் மீசையை அரி சவரம் செய்யச் சொல்லி வற்புறுத்தியதால் ஜோ ஆப் மிக சோகமாக இருந்தான். செவ்வின் மீசைக்கும் அதே கதியே கிடைத்தது. இந்த மீசைகள் இவர்களை பலஸ்தீனியர்கள் என அடையாளம் காட்டிவிடும் என அரி பயந்தான்.

"எக்ஸ்சோடஸ்" பயணத்துக்கான பொருட்களுக்கு மேலதிகமாக கரா ஓலொஸ் முகாமுக்கு அவசரமாகத் தேவைப்பட்ட அத்தியாவசியப் பொருள்களிலும் சில தொன்கள் நிறையானவற்றை டேவிட் ஏற்றிக் கொண்டான்.

பிரிட்டிஸ் ஆயுதங்களைக் கண்ட செவ் ஜில்போவா மெய் மறந்து போனான். பால்மாக்ஸில் அவன் சேவையாற்றிய இவ்வளவு காலமும், அவர்களுக்கு ஆயுதங்கள் தேவை யாயிருந்தது. ஆனால் இவ்வளவு தொகையில் அழகான இயந்திரத் துப்பாக்கிகள், மோட்டார்கள், கார்பைன்கள் போன்றவற்றைக் கண்டதும் அவனால் தாங்க முடியவில்லை.

வேலையாட்கள் குழு இயந்திர கதியில் வேலை செய்தது. மான்ட்றியாவின் பட்டியல்களிலிருந்து, எவையெவை எங்கெங்கே களஞ் சியப்படுத்தப்பட்டிருக்கின்றன. என்று அரி நன்றாக அறிந்திருந்தான். மாலை வேலையை முடிவுக்குக் கொண்டுவர முன், ஜோ ஆப் யார்கோனி சில ஸ்கொட்ச் பெட்டிகளையும், சில பிரண்டிப் பெட்டிகளையும், சில ஜின் பெட்டிகளையும், மருத்துவத் தேவை களுக்கான சில வைன் பெட்டிகளையும் ஏற்றிக் கொண்டான்.

பாமாகுஸ்ரா துறைமுகத்தில் எஸ்.எஸ். அச்சான் என்ற கப்பலில் பன்னிரண்டு புத்தம் புதிய ட்ரக்குகளையும், அவற்றில் நிறைந்திருந்த விநியோகப் பொருட் களையும் ஏற்றிவிடச் செல்லும் பாவனையில் பயணம் தொடர்ந்தது. அவரது சிறப்பான ஒத்துழைப்புக்காக களஞ்சிய பொறுப்பதிகாரியை மனமார அரி பாராட்டிய பின், அவனும் அவனது வேலையாட்கள் குழுவும், அவர்கள் உட்சென்று ஆறு மணித்தியாலங்களின் பின் அக்களஞ்சியத்திலிருந்து



வெளியேறினர்.

பால்மாக்குகள் தங்கள் ஆரம்ப வெற்றி குறித்து மிகவும் புளகாங்கிதம் அடைந்தனர். ஆனால் இது ஒரு குழு முயற்சியின் ஆரம்ப நடவடிக்கையாகவே இருந்ததால், அவர்களை அளவுக்கு மீறித் தங்களைப் பற்றிப் பெருமைப் பட்டுக் கொள்ளவோ அல்லது ஓய்வெடுக்கவோ அரி இடம் கொடுக்கவில்லை.

கிடியோன் திட்டத்தின் அடுத்த கட்டம், அவர்கள் திருடிக் கொண்ட ட்ரக்குகளுக்கும், பொருட்களுக்கும் பொருத்தமான மறைவிடம் ஒன்றைக் கண்டு பிடிப்பதாகும். அரி அதற்கும் ஒரு தீர்வு வைத்திருந்தான். பாமாகுஸ்ராவின் புறநகர் பகுதியிலே கைவிடப்பட்ட பிரிட்டிஷ் முகாம் ஒன்றை அவன் கண்டிருந்தான்.

தொடரும்...

### அவுஸ்திரேலியாவில் மாவீரர் நாள் நடைபெறும் இடங்கள்

**Sydney :** Sydney Adventist College Hall
159 Albert Rd
Strathfield 2135
**Date : 29.11.97 Time : 5.30 pm.**

**Canberra :**
Theatre Auditorium
Erindale Leisure
Mcbryde Crescent
Wanniassa A.C.T
**Date : 30.11.97 Time : 5.30 pm**

**Western Australia:**
Don Russell Performing Arts Centre
City Of Gosnelis
Murdoch Road, Thornlie
**Date : 6.12.97 Time : 6.30 pm**

**Melborne:**
University High School
Story Rd, Parkville
Mel: Reference 43 F 3
**Date : 6.12.97 Time : 6.00 pm**

**Queensland :**
St.Aidan's School
11 Ruthven St
Corinda, Queensland
**Date : 13.12.97 Time : 6 pm**

www.tamilarangam.net





T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-0443
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hartoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 8441 F: 560 8224


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்